பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 18 | புதன்கிழமை | 01.05.2024 | அதிர்வு 274

## எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் குறைப்பு



இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப் 07




# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர்

## கட்டாயம் களமிறக்க வேண்டும் என்று சிவில் சமூகத்தினர் கூட்டுத் தீர்மானம்

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்டாயம் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சிவில் சமூகத்தினர் கூட்டுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.**

**தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் நேற்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.** 07

## யாழ்.வைத்தியசாலை தாதியரை அவதூறு செய்த சுகாதார ஊழியருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

### இப்படிக் கூறுகின்றார் பணிப்பாளர் சத்தியமூர்த்தி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் எனக் கூறி தாதியர் மீது சமூக ஊடக செயலி மூலமாக அவதூறு செய்த சுகாதார ஊழியர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தான் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்தார் எனவும், அப்போது வேறு ஒரு நோயாளரிடம் தாதியர் அநாகரிகமாக நடந்து கொண்டார் எனவும் தெரிவித்து தாதியர்களுக்கும் 07



இன்று என் பத்தியில் முதல் விடயத்தில் நான் எதுவும் புதிதாகத் தரப் போவதில்லை.

மறைந்த ஈழவேந்தன் ஐயா பற்றி நேற்று என் பத்தியில் விவரித்திருந்தேன். அது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் சின்னையா இரத்தினவடிவேல் நேற்றுக் காலையில் நேரத்தோடு ஒரு செய்தியை – கருத்தை – தொகுத்து அனுப்பியிருந்தார். அதை அப்படியே – எந்த அடித்தல், திருத்தலுமின்றி அப்படியே இங்கு முதலில் தருகிறேன்.

அதற்கு முன்னர் சின்னையா இரத்தினவடிவேல் பற்றி ஒரு சிறிய குறிப்பு. தமது இளமைக் காலம் தொட்டு தமிழரசுக் கட்சி மீது மாறாப் பற்றுக் கொண்ட ஒரு கொள்கையாளன். தமிழரசுக் கட்சியின் 06

# டிரான் அலஸை பதவியிலிருந்து நீக்க சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

டிரான் அலஸை உடனடியாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு இலங்கை சட்டத் தரணிகள் சங்கம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

தண்டனையில் இருந்து விடுபடுவதை ஊக்குவிக்கும் வகையிலும் சட்டவாட்சியை உதாசீனப்படுத்தும் வகையிலும் தொடர்ச்சியாக கருத்து வெளியிடுகின்றமையால் அமைச்சர் இனியும் அந்த பதவியில் தொடர்வதற்கு தகுதியற்றவர் என்பது தெரியவருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல ஊடகங்களிலும் விரிவான கவனத்தை ஈர்த்திருந்த, கட்டுகுருந்த எஸ்.ரி.எவ். பயிற்சி முகாமில் இடம்பெற்ற பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் அணிவகுப்பு நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில், கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கலந்தாலோசித்துள்ளது.

அமைச்சரின் கூற்றை வன்மையாகக் கண்டித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அமைச்சரின் இந்த கூற்று அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் குற்றவியல் நீதி தீர்ப்புக் கட்டமைப்பை நிர்வகிப்பதற்காக நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணானது என வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கம் மேலும் குறிப்பிடுகையில் –

"குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை விதிப்பது உள்ளிட்ட நீதியை நிலைநாட்டும் செயற்பாடு அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளநீதிமன்றஎல்லைக்குள்மத்திரமேஇடம்பெறுகின்றது.

அத்தகைய செயற்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்ற பூரண விசாரணை மற்றும் நியாயமான வழக்கு விசாரணை உள்ளிட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டனவாக அமைய வேண்டும். அண்மைக் காலமாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மேற்கொண்ட சட்டவிரோத கொலைகள், கைது செய்யப்பட்ட நிலையில் இடம்பெற்ற மரணங்கள், துன்புறுத்தல் சம்பவங்கள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை கவனத்தில்கொள்ளும்போது அமைச்சரின் இந்த கூற்றினூடாக நீதி, தண்டனை விதிப்பு, தண்டிக்கும் நீதிமன்றத்தின் விடயதானங்களுக்கு அப்பாற்பட்ட உரிய நடைமுறைக்கு இணங்காத தான்தோன்றித்தனமாக நிர்வகிக்கக்கூடிய செயற்பாடு என்ற அபாயகரமான நிலைப்பாடு ஏற்படுகின்றமை தெளிவாகின்றது.

அமைச்சரின் கூற்று உடனடியாக மீளப் பெறப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடுமையாக வேண்டுகோள் விடுக்கின்றது.

அமைச்சர் டிரான் அலஸ், தண்டனையில் இருந்து விடுபடுவதை ஊக்குவிக்கும் வகையிலும் சட்டவாட்சியை பொருட்படுத்தாமலும் மீண்டும் தெரிவிக்கும் கருத்துகளின் ஊடாக அவர் தொடர்ச்சியாக அந்தப் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றவர் என்பதை காண்பிப்பதால் அவரை உடனடியாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து அகற்றுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

மேலும், ஸ்தாபிக்கப்பட்ட சட்ட நடைமுறை வரையறைகளுக்கு உட்பட்டு முன்னெடுக்கப்படும் தண்டனை விதிப்பதற்கான அதிகாரம் முழுமையாக நீதிமன்றத்திடம் காணப்பட வேண்டும் என தூய்மையான கோட்பாட்டை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

இதனைத் தவிர எந்தவொரு பண்புள்ள நீதிக் கட்டமைப்பும் பின்பற்ற வேண்டிய சட்டம், சர்வதேச கோட்பாடுகளால் உறுதி செய்யப்பட்ட நியாயமான, செயற்றிறன் மிக்க விசாரணைக்கு உட்படுவதற்கும் நியாயமான வழக்கு விசாரணையைப் பெற்றுக்கொள்வதற்கும் குற்றம் தொடர்பில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அனைவருக்கும் உள்ள அடிப்படை உரிமையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது." – என்று குறிப்பிட்டுள்ளது.

# தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி கோரி எம்.பிக்கள் கடிதம்



தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குமாறு சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் தமக்கு கிடைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்கவுள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 10 வருடங்களாக தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவில்லை என சபாநாயகர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

12 வருடங்களுக்கும் மேலாக பாவனையிலுள்ள பழைய வாகனங்களையே பெரும்பாலோனோர் பயன்படுத்தி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வாகனங்களை இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதி அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது.

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளும் கவனத்திற்கொள்ளப்படுமென அவர் சுட்டிக்காட்டினார்.

வாகன இறக்குமதி தொடர்பில் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ஹெஷான் சேமசிங்க முன்னர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உமா ஓயா திட்டம் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை

## இராஜாங்க அமைச்சர் அனுருத்த ஹேரத் தெரிவிப்பு



"உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதன் பின்னர், அதனுடன் தொடர்புடையதாக மண்சரிவுகளோ வேறு பிரச்சினைக்குரிய நிகழ்வுகளோ இதுவரை பதிவாகவில்லை."

– இவ்வாறு மின்சக்தி இராஜாங்க அமைச்சர் அனுருத்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை நிறைவு செய்வதில் 09 வருடங்கள் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக நாட்டுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 09 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பு 587 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு 529 மில்லியன் டொலர்களாக பதிவு செய்யப்பட்டது.

ஆனால், கடந்த 09 வருடங்களில் உமா ஓயா திட்டத்தின் ஊடாக மின்சார உற்பத்தி மேற்கொண்டு அதனை தேசிய கட்டமைப்பில் சேர்க்க முடியாமல் போனதால் இத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகைக்கு நிகரான இழப்பை சந்திக்க வேண்டியிருந்தது. அத்துடன், உமா ஓயா திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்தியை தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த திட்டத்தினால் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக கூறி மக்களை தவறாக வழிநடத்தும் ஊடக நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன எனத் தெரிகிறது.

மழைக்கு பின் தோன்றும் சிறிய அருவிகளை காட்டி இந்த வளர்ச்சி திட்டத்தை சீர்குலைக்கும் பணியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இந்த திட்டத்துடன் தொடர்புடைய மண்சரிவு அல்லது வேறு எந்த சம்பவமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், உமா ஓயா பிரதேசத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் விரிசல்கள் மற்றும் நீர்க்கசிவுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக இன்று பூகற்பவியலாளர்கள் குழுவொன்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அங்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், அதற்கெல்லாம் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகள் உள்ளன என்பதை அரசாங்கம் என்ற வகையில் நாங்களும் பொறுப்புடன் கூறுகிறோம்.

அப்படி இருந்தால், அதை எப்படி தடுப்பது என்பது பற்றிய அனுபவம் உலகம் முழுவதும் உள்ளது. கடந்த காலங்களில் சிலரின் நாசவேலைகளால் நாடு இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களை இழந்தது. கடந்த 2015 ஆம் ஆண்டு நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது, ஆனால் நீதிமன்ற நடவடிக்கைகளால் அது இழக்கப்பட்டது.

மேலும், கெல்வரபிடிய எல்.என்.ஜி. ஆலை மற்றும் பல்வேறு சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் போராட்டங்கள் மூலம் இழக்கப்பட்டன. இவ்வாறாக பொதுமக்களை அச்சுறுத்தும் மற்றும் தூண்டிவிடக்கூடிய செய்திகள் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டிற்கு இல்லாமல் போய்விட்டன. எனவே, உண்மை தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும், மின்சார உற்பத்தியில் 70 வீதம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் இருந்து பெறுவது என்ற கொள்கை முடிவை எங்கள் அரசாங்கம் எட்டியுள்ளது. நீர், சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், 10 மெகாவோர்ட்டிற்கு குறைவான காற்றாலை அல்லது சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களை விரைவாகப் பெற மின்சார சபை மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இணைந்து புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தைப் பெற முடியாவிட்டால், எதிர்காலத்தில் இன்னொரு மின் நெருக்கடி உருவாகலாம்.

மேலும், மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்களைப் பெற்று ஆலைகளை தொடங்காமல் கால தாமதம் செய்து, அந்த அனுமதிப் பத்திரங்களை அதிக தொகைக்கு ஏனைய தரப்பினர்களுக்கு விற்பனை செய்யும் மாபியாவையும் கண்காணித்து வருகின்றோம். எனவே, மின் உற்பத்தி நிலையங்களை விரைவுபடுத்துவதற்கான புதிய திட்டத்தை தற்போது தொடங்கியுள்ளோம். அதன்போது புள்ளி முறைமை மூலம் அனுமதி வழங்கி, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சரியான நேரத்தில் விரைவாக சேகரிக்கும் செயற்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 05 முதல் 500 மெகாவோர்ட் வரையிலான மேற்கூரை சோளார் பனல் திட்டங்களால் கடந்த காலத்தில் மாதத்திற்கு சுமார் 22 மெகாவோர்ட்களை மட்டுமே பெற முடிந்தது. ஆனால் இந்த நிலை குறித்து முறையான ஆய்வுகளைச் செய்த பிறகு மார்ச் மாதத்துக்குள் அந்த அளவை 40 மெகாவோர்ட்டாக உயர்த்த முடியும்." – என்றார்.

# உயர் நீதிமன்றத்துக்கு நீதியரசர்களை நியமிக்கவோ பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்காலத் தடை

பிரதம நீதியரசர் தவிர உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 4 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில், ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றத்தினால் இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நிராகரித்தமை மூலம் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புக் கவுன்ஸில் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தெரிவித்து நபரொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி பி.பீ.எஸ்.எம். பதிரனவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எஸ் .துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய உயர் நிதீமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முறையான நடைமுறையை பின்பற்றாது, உயர் நீதிமன்றத்திற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட நீதியரசரின் பரிந்துரையை நிராகரித்ததன் மூலம், அரசமைப்பின் 12 ஆவது சரத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்வதற்கு நீதியரசர்கள் குழாம் அனுமதி வழங்கியது.

மனு மீதான விசாரணைக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம், விசாரணை நிறைவடையும் வரை அமுலாகும் வகையில், இந்த இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்தது.

மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 04 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

CEYLON JOURNALIST FORUM
சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம்
සිලෝන් ජර්නලිස්ට් ෆෝරම්

# சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் மே தினம் அட்டாளைச்சேனையில்

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாடு செய்துள்ள மே தினக் கொண்டாட்டம் அட்டாளச்சேனை சந்தை சதுக்கத்தில் இன்று காலை 8:00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் (ஜே.பி.) தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது விசேட JM பிரார்த்தனை மற்றும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமையுடன் பயன்தரும் மரங்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் மாயம்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் காணாமல்போயுள்ளார்.

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வைத்தியசாலையில் இருந்து காணமால்போயுள்ளார்.

வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் பகல் காணாமல் போன நபர் நேற்றுமுன்தினம் இரவு வரையில் வீடு திரும்பாத நிலையில் குடும்பத்தினர் அவரைத் தேடி வருகின்றனர்.

## தண்டனைச் சட்டக் கோவையை திருத்த அமைச்சரவை அனுமதி




அனைத்து துறைகளிலும் உடல் ரீதியான தண்டனை விதிப்பதைத் தடை செய்வதற்காக, தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ சிறுவர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தண்டனையையும், சட்டத்தின்படி குற்றமாக கருதும் வகையில் இந்தச் சட்டம் திருத்தப்படும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் 3 தனியார் பஸ்களின் வழித்தட அனுமதிப்பத்திரம் இரத்து

(கே.வசந்தன்)

வவுனியாவிலிருந்து சேவையில் ஈடுபடும் மூன்று தனியார் பஸ்களின் வழித்தட அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுஅவைசேவையிலிருந்துநீக்கப்பட்டுள்ளனஎனவடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர் தெரிவிதுள்ளனர்.

மூன்றுக்கு மேற்பட்ட விபத்துக்களை ஏற்படுத்தியமை, வீதியில் போட்டித்தன்மையில் பயணித்தமை போன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த பஸ்களின் வழித்தட அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் இச்செயற்பாடு மக்கள் மத்தியின் வரவேற்பைப் பெற்றுள்ளமையுடன் தொடர்ந்தும் பயணிகளின் சுதந்திரமான பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாட்டின் பணவீக்கம் இம்மாதத்தில் உயர்வு



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம், கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த மார்ச் மாதத்தில் 0.9 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப் படையிலான முதன்மை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.



# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

காலம் : 11.05.2024, 12.05.2024

இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில்

## எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில்

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் நூற்றாண்டு விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், மறுநாள் 12ஆம் திகதி காலை 09 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையிலும் விழா நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு விழாவின் இரு நாள் நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கலாநிதி தி.கமலநாதன் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அழைப்பு விடுத்துள்ளார்.




# ஆளுநர் - எரிக் சொல்ஹெய்ம் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு







(எஸ்.நிதர்சன்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச கால நிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை, மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றம், எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்புக் கிளையின் தூணாக விளங்கியவர். கொழும்புக் கிளையின் மிக மூத்த உறுப்பினர் அவர்தான் என்று நினைக்கிறேன். இரகுபதி பாலசிறிதரன், சிங்காரவேலன் போன்றோரும் உளர். கொழும்புக் கிளையின் தலைவராக ஈழவேந்தனும், செயலாளராக உமா மகேஸ்வரனும் (பின்னாளில் புளொட் செயலதிபர்) இருந்த போது அக்கிளையில் உப செயலாளராக இருந்தவர் சின்னையா இரத்தினவடிவேல்.

இப்போது திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி வழக்கில், இடையீட்டு எதிராளியாக இவர் சமர்ப்பித்த விண்ணப்பம் வழக்கின் அனைத்துத் தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது தெரிந்ததே.

இனி அவர் வரைந்த குறிப்பைப் பார்ப்போம்:-

'இரகசியம் - பரகசியம்' என்ற காலை முரசுப் பத்திரிகைப் பத்தியை இன்று வாசித்தபோது அதில் ஈழவேந்தன் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்த இரு விடயங்களைப் பற்றி பகிர்ந்துகொள்ள வேண்டுமென நினைக்கிறேன்.

அப்பழுக்கற்ற தமிழ் உணர்வாளர். இந்த இடத்தில் இப்படிப் பேசுவது சரியா என்றெல்லாம் பார்க்கமாட்டார். தமிழ் உணர்வு சம்பந்தப்பட்ட விடயம் என்று வரும்போது அவரது அறிவு முழுவதும் ஒரு இடத்திலேயே குவிந்துவிடும். கூட இருப்பது யார், இந்த அவைக்கு இது பொருந்துமா என்ற விடயம் எல்லாம் அழிந்துவிடும். விளாசு விளாசென்று விளாசிவிடுவார். அவரிடம் பேசுவதற்கு அத்தனை விடயங்கள் விரல்நுனியில் இருக்கும். சரளமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பட பட வென வார்த்தைகள் விழும். தமிழ்ச் செல்வன் அவரை காட்டாறு போன்ற உணர்ச்சிப் பெருவெள்ளம் எனக் குறிப்பிட்டமை மிகப் பொருத்தமானதுதான்.

தமிழ் உணர்வு சம்பந்தப்பட்ட விடயம் என வரும்போது அவரை எவராலும் கட்டுப்படுத்த முடியாது. அதற்காக எத்தனை அவமதிப்புக்களையும் சந்திக்க அவர் தயார். அத்தகைய அவமதிப்புக்கள், ஏன் உடல்ரீதியான தாக்குதல்களைக் கூடச் சந்தித்த பல வேளைகளில் நான் அவருடன் கூடவே இருந்திருக்கிறேன். ஓர் அமைப்பில் இருந்தபோதும் அவரை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்க எவராலும் முடியாது. அவர் எப்போதுமே ஓர் அமைப்பிலிருந்தபடிதான் செயற்பட்டார் என்றபோதும் அந்த அமைப்பின் கட்டுப்பாடா அல்லது தமிழ் உணர்வு விடயமா என்ற கேள்வி எழும்போது அவர் அந்தக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டுவிடுவார். அமைப்பல்ல, அதன் நோக்கமும் இலட்சியமுமே முக்கியமானதாகக் கொண்டு செயற்பட்ட அப்பழுக்கற்ற தமிழன்.

அவரது நம்பிக்கை எதன்பாற்பட்டதோ அதன்படி செயற்பட்டவர். அதனாற்றான் 68களிலே வ.நவரத்தினம் நா.உ. கட்சியிலிருந்து விலக்கப்பட்டு சுயாட்சிக் கழகம் என்ற கட்சியைத் தாபித்த போது அதனுடன் தன்னை இணைத்துக் கொண்டவர். பின்பு கழகம் மக்கள் செல்வாக்கற்று மங்கியதும் தனக்கான தளம் இதுதான் என தமிழரசுக்கட்சியுடன் மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். இந்த அடிப்படையில்தான் அவரது தொடர்புகள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனாயினும் சரி, விடுதலைப் புலிகளுடனாயினும் சரி இருந்தது. புலம்பெயர்ந்தபின் நாடுகடந்த தமிழீழம் அமைப்புடனான தொடர்பும் அப்பேற்பட்டதுதான்.

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டங்களில் அவர் தலைவர்களுடன் கருத்து முரண்பட்ட சம்பவங்கள் ஏராளம். காசி ஆனந்தன், கோவை மகேசன் ஆகியோருடன் இணைந்து மட்டக்களப்பின் இராசதுரைக்கு எதிராகச் செயற்பட்டவர்களுள் இவரது பங்கு முக்கியமானது. அப்போது அவரது செயற்பாடுகள் பலராலும் விமரிசிக்கப்பட்டன. ஆயினும் அவர் தனக்குச் சரியானது என்று நினைத்துவிட்டால் அதனை எந்த விலை கொடுத்தும் முன்னெடுக்கத் தயங்கமாட்டார். ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்து அவருடன் பயணிப்பதென்பது மிகவும் கடினமான விடயம். அதற்கான காரணம் அவரது அதீதமான நேர்மை மிக்க தமிழர் உணர்வு என்பதுவும் மறுக்கப்பட முடியாத உண்மை.

1972 ஆம் ஆண்டு. சிறிமாவோ அம்மையாரின் அரசால் புதிய அரசமைப்பு பற்றிய விவாதங்கள் பல இடங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அந்தக் காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அடிக்கடி விவாத அரங்குகளை கொழும்புக் கோட்டையில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. போரம் என்ற அமைப்பு அதே மண்டபத்தில் நடத்தவது வழக்கம். புதிய அரசமைப்புப் பற்றிய கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ஈழவேந்தனின் கவனத்திற்கு வந்தது. அந்த அரசமைப்பின் கர்த்தா கொல்வின் ஆர் டி சில்வா, என்.சண்முகதாசன், பாலா தம்பு போன்ற பல முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொண்டார்கள்.

ஈழவேந்தன் ஏற்பாட்டில் நாம் ஒரு ஐந்தாறு இளைஞர்கள் மண்டபத்திற்குச் சென்றோம். எதிர்ப்புக் கோசம் எழுப்புவது என்பது எமது திட்டம். கொல்வின் ஆர் டி சில்வா பேசும்போது ஒரு கட்டத்தில் 'இனிமேல் கோடீஸ்வரன் போன்றவர்கள் பிரிவி கவுன்சிலுக்கு தமது இனவாத வழக்குகளை எடுத்துச் செல்ல முடியாது' என்று முழங்கினார். அப்போது ஈழவேந்தன், 'இல்லை எமது குரலை எங்கும் தடுத்து நிறுத்த உங்களால் முடியாது' என்று குரலெழுப்பினார். நாமெல்லோரும் அவருடன் சேர்ந்து சத்தமிட்டோம். காவலாளர்கள் வந்து எம்மை வெளியேற்றினார்கள்.

70களில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது தமிழரசுக் கட்சியின் பணிமனை போன்றே செயற்பட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முக்கிய பொறுப்பில் நான் இருந்தமை அதற்கான வாய்ப்பை எனக்குத் தந்திருந்தது.

எந்த மேடையில் தோன்றினாலும், 'எனை நன்றாக இறைவன் படைத்தனன் தனை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலர் திருவாசகத்துடன்தான் தனது பேச்சை ஆரம்பிப்பார். அவ்வப்போது தேவைப்பட்ட போதெல்லாம் 'சைவமின்றேல் தமிழில்லை, தமிழின்றேல் சைவமில்லை' என்ற அவருக்கு சைவத்தின்மேல் இருந்த ஆழ்ந்த பக்தியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வாசகங்களையும் தயங்காது தெரிவித்துவந்தார். அது அவரது தமிழ் உணர்வை எந்த விதத்திலும் பாதிப்படைய இடம் கொடுத்தவருமல்லர்.

இறுதி மூச்சுவரை தமிழுணர்வுடனேயே வாழ்ந்து வாழ்வை நிறைவு செய்துகொண்ட அண்ணலின் ஆன்மா இறைவன் சந்நிதியில் சாந்தி பெற அனைவரும் பிரார்த்திப்போம்.

- இது இரத்தினவடிவேல் அனுப்பி வைத்த குறிப்பு. ஈழவேந்தன் என்ற மனிதரை புலிகள் ஏன் அத்துணை தூரம் மதித்தார்கள் என்பதற்கான சூக்குமம் இக்குறிப்பில் புதைந்து கிடப்பதாக நான் கருதுகிறேன்.

புலிகளைப் போன்றே தான் வரித்த நிலைப்பாட்டில் அவருக்கிருந்த பற்றுறுதி, திடசங்கற்பம், நீங்காப் பிடிப்பு அவரை உயர்ந்த மனிதராகப் புலிகளிடம் நிச்சயம் அடையாளம் காட்டியிருக்கும் என்று நினைக்கிறேன்..!

\+ \+ \+

கிளிநொச்சியில் இம்முறையும் வழமை போல மே தினம் - தமிழரசுக் கட்சியின் தானைத் தலைவர் ('குறுநில மன்னர்' என்ற பெயரை இனி விட்டு விடலாமே...) ஏற்பாட்டில்.

இது தமிழரசுக் கட்சியின் மே தின நிகழ்வல்ல. தமிழரசுக் கட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் நம் தானைத் தலைவர் வழமையாக தம் குறுநிலத்தில் நடத்துவது என்பதால் அதில் குற்றம் ஒன்றும் கூற முடியாது.

ஆனால் வழமைக்கு மாறாக ஒன்று இம்முறை உண்டு.

நிகழ்ச்சி நடப்பது என்னவோ கிளிநொச்சி மாவட்டத்தில்தான். ஆனால், அது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்குள் வருவது.

வழமையாக அந்தத் தேர்தல் மாவட்டத்தில் தமது தமிழரசுக் கட்சியின் ஒரேயொரு சக எம்.பியான சுமந்திரனை மே தின ஆஸ்தான பேச்சாளராக நம் தானைத் தளபதி அழைப்பதும், அவர் தவறாது கலந்து கொண்டு பேசுவதும் ஒழுங்கு.

இம்முறை, மனோ கணேசன், நீதியரசர் விக்னேஸ்வரன் எனப் புற தரப்பார் எல்லோருக்கும் வெற்றிலை வைத்துள்ள நம் தானைத் தலைவர், சுமந்திரனுக்கு ஏனோ அழைப்புக் கொடுக்கவே இல்லை.

நடக்கவிருந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தையும் 'குறாப் அப்செண்ட்' மூலம் வெற்றிகரமாகத் தடுத்து விட்டனர். அக்கூட்டம் நடந்திருந்தால் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ மே தினம் நடந்திருக்கும். அதுக்கும் ஆப்பு வைத்து விட்டமையால் தமிழரசைப் பொறுத்த வரைத் தானைத் தலைவனின் தனித் திருவிழாதான் இம்முறை மேதினத்தில் வடக்கில்...!

## எரிபொருள்களின் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 368 ரூபாவாகும்.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 420 ரூபாவாகும்.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் ஒட்டோ டீசல் 333 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 377 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 215 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதித் தேர்தலைக் கையாள்வது.

2. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து அந்தத் தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாகக் கையாள்வது.

3. அதற்கு அமைய ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது.


4. அதற்காகச் சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

5. தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாஷைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டே செயற்படுவது.

கூட்டுத் தீர்மானத்தில் ஒப்பமிட்டோர் விவரம் வருமாறு:-

+ திருகோணமலை மாவட்ட ஆயர்
+ தென்கைலை ஆதீனம்
+ சிவகுரு ஆதீனம்
+ பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் (அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக் கழகம்)
+ கலாநிதி. க. சிதம்பரநாதன் (அரங்க செயற்பாட்டுக் குழு)
+ அருட்பணி த. ஜீவராஜ் (சமூகச் செயற்பாட்டாளர், மட்டக்களப்பு)
+ நிலாந்தன்
+ அருட்பணி பி ஞானராஜ் (நேரு) - மனித உரிமை செயற்பாட்டாளர் (மன்னார்)
+ நீதி சமாதான ஆணைக்குழு - யாழ். மறை மாவட்டம்
+ பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான அமைப்பு
+ பிரசைகள் குழு - வவுனியா
+ தமிழ் சிவில் சமூக அமையம்
+ வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம்
+ அறிவார் சமூகம் - திருவோமலை
+ அகில இலங்கை மீனவர் மற்றும் விவசாய தொழிலாளர்களின் கூட்டமைப்பு
+ கடற்றொழிலாளர் இணையம் - வடக்கு மாகாணம்
+ கரைச்சி வடக்கு சமாசம்
+ சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
+ சிவில் அமைப்பு - மட்டக்களப்பு
+ தமிழ் ஊடகத் திரட்டு
+ கிழக்கு பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம்
+ யாழ். பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம்
+ மாவட்ட கமக்காரர் அமைப்பு - வவுனியா
+ தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்
+ தமிழர் கலை பண்பாட்டு மையம்
+ எம்பவர் நிறுவனம்
+ மக்கள் மனு
+ வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு
+ குரலற்றவர்களின் குரல்
+ மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர் அமைப்பு
+ சமூக மாற்றத்துக்கான அமைப்பு - வவுனியா
+ தமிழ் சமூகச் செயற்பாட்டாளர்கள் இணையம் - திருகோணமலை.

# போதை பொருளுடன் இரு வியாபாரிகள் காத்தான்குடியில் நேற்றுக் காலை கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடியில் போதை பொருள் வியாபாரிகள் இருவரை 10 கிராம் 4 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான, வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு உதவி பொலிஸ் பரிசோதகர் மதுசங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று அதிகாலை 4 மணியளவில் காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து இந்த இருவரையும் கைது செய்தமையுடன் போதைப் பொருளையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் அஜர்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதனா வைத்தியசாலைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் சமூக ஊடக செயலி மூலம் வீடியோ பதிவை மேற்கொண்டிருந்தார்.

இது விடயமாக சம்பந்தப்பட்ட பிரிவு உத்தியோகத்தரின் வைத்தியசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடி, பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1. மேற்படி நபர் தாதியர் சேவையைப் பற்றி மிக இழிவாகக் கதைத்ததால் அது தாதியர் சேவைக்கும் வைத்தியசாலைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் தினசரி வரும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியதன் காரணமாக அவர் மீது பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2. குறித்த உத்தியோகத்தர் சம்பந்தமாக சுகாதார அமைச்சு மற்றும் அவர் பணியாற்றும் வைத்தியசாலை நிர்வாகம், பிராந்திய சுகாதார நிர்வாகங்களுக்கு அறிவித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

3. சுகாதார அமைச்சின் விசாரணையின்போது குறிப்பிட்ட உத்தியோகத்தர் வைத்தியசாலையில் நடந்த சம்பவம் பற்றி தெளிவாக அது நடந்த நேரம், விடுதி, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் பற்றி அறியத் தருவாராயின் அது விடயமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையானது பல்லாயிரக்கணக்கான மக்கள் தினசரி பல்வேறு சிகிச்சைகளுக்காக வந்து செல்கின்ற இடம். ஆகவே, இவ்வாறான அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்ற செய்திகள் சிகிச்சைக்காக வருபவர்களையும் பொதுமக்களையும் பதற்றத்துக்குள்ளாக்கக்கூடியது. அத்துடன் வைத்தியசாலைச் சேவைகள் தொடர்பாக நம்பிக்கையீனத்தையும் வெறுப்புத்தன்மையையும் ஏற்படுத்தக் கூடும். ஆகவே, இவ்வாறான நடவடிக்கைகளைப் பொதுமக்கள் நலன் கருதி அனுமதிக்க முடியாது.

வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள்மற்றும்கவனத்தில்கொள்ள வேண்டியஏனையவிடயங்கள்பற்றிபணிப்பாளர் பணிமனைக்கு எழுத்து மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உரியவர் முறைப்பாடு செய்கின்ற போது, தகுந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்படும். ஆகவே, பொதுமக்கள் இந்த விடயத்தில் மீண்டும் அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மேன் மக்கள் தினம்

இன்று மே முதலாம் திகதி. சர்வதேச தொழிலாளர் தினம்.

மேதினியின் மேன்மக்களாகிய தொழிலாளர்களின் சிறப்பை மதித்துப் போற்றும் நாள்.

சில சர்வதேச தினங்களுக்குப் பின்னால் வரலாறே உண்டு. மே தினத்திற்குப் பின்னால் அப்படி இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு உண்டு.

உழைப்பாளிகளுக்கு அவர்களின் உழைப்புக்கான பிரதிபலன் கிடைக்கிறதா என்பது இன்றளவும் கேள்விக்குறியே. 8 மணி வேலை, அடிப்படை ஊதியம், தொழிலாளர் வைப்பு நிதி, காப்பீடு, பெண்களுக்குப் பணியிடத்தில் கிடைக்கும் உரிமைகள், தொழிற்சங்கங்கள் என இன்று நாம் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் மே தினப் போராட்டமே விதையாய் அமைந்தது.

1880 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் தொடங்கி, 1890 ஆம் ஆண்டு பாரிஸில் உருவானதுதான் மே தினம். அல்லது, உலகத் தொழிலாளர் தினம். அதாவது மே 1.

மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் முற்காலத்தில் 18 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர். இதை எதிர்த்து தாங்கள் உழைக்க வேண்டிய நேரத்தை 8 மணி நேரமாக வரையறுத்து, அதற்காக போராடி அந்த உரிமையைத் தொழிலாளர்கள் பெற்ற நாளே மே தினம்!

உழைக்கும் மனிதனே இந்த பொருளிய உலகத்தில் சிருஷ்டிகர்தா. அவனே உழைப்பின் மூலதனம். அவனே இயங்கியலின் மைய விசை.

“உழைக்கும் மனிதன். அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி. அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம். அந்த உற்பத்தி உலகத்தில் இருந்து உருப் பெறும் உற்பத்தி உறவுகள். அந்த உற்பத்தி உறவுகளில் இருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள். அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளில் இருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்த சமூக மாற்றங்களாக அசைந்து செல்லும் வரலாறு. இப்படியாக உழைக்கும் கரங்களில் இருந்து கட்டவிழ்கின்றது மனித சரித்திரம் என கார்ள் மார்க்ஸ் விவரிக்கின்றார்” - என்று மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடுகிறார்.

உழைக்கும் உழைப்பாளி மனிதன். அவன் முதலாளிய சந்தையில் ஒரு விலை பொருளாகிறான். தனது வயிற்றை நிரப்ப தனது உழைப்பை விற்கிறான். தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி தொழிலாளியின் ஆக்க சக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியைப் பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்தில் இருந்து முதலாளி உபரி லாபத்தை எடுத்துக் கொள்கிறான்.

மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கிறது. அந்த பொருள்களில் இருந்து ஒரு பண்ட உலகம் தோன்றுகின்றது. உழைப்பு சக்தியால் உருவாக்கப்படும் இந்த பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக, ஒரு புதிரான பொருள் உலகமாக தோற்றப்பாடு கொள்கிறது. உழைப்பவனின் படைப்பு அவனுக்கு அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி இன்னொருவனின் செல்வமாகி, கூடு விட்டு கூடு பாய்கிறது. முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான் . இதையே கார்ள் மார்க்ஸின் மூலதனம் பிட்டுக்காட்டுகிறது என்கிறார் மதியுரைஞர்.

இவ்வாறு உலக இயக்கத்தின் மைய விசையான தொழிலாளர்கள் பெரும் போராட்டங்கள், இழப்புகள், அழிவுகள், நெருக்கடிகளை எதிர்கொண்டே தமது உரிமைகளை இறுதியில் நிலைநாட்டினர். 1880 இல் அமெரிக்காவில் உரிமைகளுக்காக தொழிலாளர் வர்க்கம் ஆரம்பித்த போராட்டமே

தொழிலாளர்களின் உரிமை கோரிக்கையும், தொழிலாளர்களின் இயக்கத்தையும் வலிமை பெற வைத்தன. 8 மணிநேரம் கொண்ட உழைக்கும் தினமும், வாரத்தில் ஒரு நாள் விடுமுறையும் கிடைத்தது. உலகெங்கிலும் உழைக்கும் மக்களின் உரிமைகள் நிறைவேற, மானுடத்தை உயர்த்த அரும்பாடுபட்ட அந்த உழைக்கும் மக்கள் கூட்டத்தையும் மனிதாபிமானத்தோடு பார்க்க உலகம் கற்றுக்கொண்டது.

அமெரிக்காவில் உருவான மே தினம் தொழிலாளர்களின் ஒற்றுமை தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

‘உலகத் தொழிலாளர்களே விழித்தெழுங்கள்!’ என்பதே மே தினம் அளித்த உரிமை முழக்கமாகும். அதை மனதில் இருத்தி, நமக்காக நம் உலகைச் சமைத்துத் தரும் அந்தத் தொழிலாளர் வர்க்கத்தை மதிப்போம்.



# இலங்கை கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

தமிழகத்தின் நாகப்பட்டினம் – செருதூர் கிராம மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகப்பட்டினம் – செருதூர் கிராமத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்துள்ளார் என தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், சுமார் இரண்டு லட்சம் இந்திய ரூபா பெறுமதியான வலைகளும் இதன்போது சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காயமடைந்த தமிழக மீனவர் நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உழைக்கும் தொழிலாளர்கள் உன்னத நிலை பெற வேண்டும்

## முதல்வர் ஸ்டாலின் மே தின வாழ்த்து

“உழைக்கும் தொழிலாளர் குடும்பங்கள் கல்வி, பொருளாதார நிலைகளில் உயர்ந்து உன்னத நிலை பெற நெஞ்சார வாழ்த்துகிறேன்.” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘மே தின’ வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

“திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளர்களை உயிராக மதிக்கும் இயக்கம். தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில் எல்லாம் தொழிலாளர்களின் நலம்நாடிப் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

1969 இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அமைந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் தொழிலாளர் நலனில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக தனியே தொழிலாளர் நலத் துறையையும், தொழிலாளர் நல அமைச்சகத்தையும் ஏற்படுத்தியது.

1969 ஆம் ஆண்டில் மே முதல் நாளை ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை நாளாக அறிவித்துச் சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டது.

1969 இல் கணபதியாபிள்ளை ஆணையப் பரிந்துரையை ஏற்று, அவசரச் சட்டம் பிறப்பித்து விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்பட்டது.

பீடித் தொழில், பனியன் நெசவு, தோல் பதனிடும் தொழில், எண்ணெய் ஆலைகள், செங்கல் சூளை, உப்பளம் முதலியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தொழிற் சங்கப் பலம் இல்லாமையால் போதிய ஊதியம் வழங்கப்படாமல் அல்லல்பட்டு வந்த நிலைகண்டு அத்தொழிலாளர்களுக்குத் தொழில் முகவர்களிடம் பேசி அவர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச ஊதியம் கிடைக்கச் செய்தது தி.மு.க. ஆட்சி.




கடைகள் மற்றும் நிறுவனங்களில் அனைத்துப் பணியாளர்களும் அமர்வதற்கு, அவர்கள் பணிபுரியும் இடங்களில் இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தருதல் மற்றும் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பான குடிநீர், கழிப்பிடம், ஓய்வு அறை மற்றும் உணவருந்தும் அறை மற்றும் முதலுதவி வசதிகள் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் 1947 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு தொழிலாளர் நலன்கள் இந்த அரசினால் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இப்படி, தொழிலாளர்கள் நலனில் முழு அக்கறை செலுத்தி தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் காத்து வரும் திராவிட மாடல் அரசின் சார்பில் தொழிலாளர் சமுதாயம் நல வாழ்விலும், பொருளாதார மேம்பாட்டிலும் முன்னேற்றங்கள் பல கண்டு உயர்ந்திட என் நெஞ்சம் நிறைந்த “மே” தின நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.” – என்று தெரிவித்துள்ளார்.

# கொவிஷீல்ட் தடுப்பூசி பக்கவிளைவை ஏற்படுத்தும்

## அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் ஒப்புக்கொண்டது




கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கொரொனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, கொரோனா வைரஸை கட்டுப்படுத்து வதற்காக பல்வேறு நாடுகளும் தடுப்பூசியை கண்டு பிடிக்க முயற்சித்த நிலையில், ஒரு சில நாடுகள் அதற்கான தடுப்பூசிகளை கண்டுபிடித்தன.

இதில் பிரித்தானியாவைச் சேர்ந்த அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் மற்றும் ஒக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகம் இணைந்து தடுப்பூசியை உருவாக்கின.

இந்த தடுப்பூசி இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டது.

இதற்கிடையேஅஸ்ட்ராஜெனெகாநிறுவனத்தின்கொரோனா தடுப்பூசியை செலுத்திய பிறகு மூளையில் பாதிப்பு ஏற்பட்ட தாக கூறி ஜேமி ஸ்காட் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் தொடர்ந்திருந்தார்.

மேலும், அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனத்தின் எதிராக நஷ்டஈடு கோரி சுமார் 51 வழக்குகள் தொடரப்பட்ட நிலையில், இவ்வழக்குகள் மீதான விசாரணைகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில், அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் நீதி மன்றத்தில் அளித்த ஆவணத்தில், "தன் நிறுவனம் உரு வாக்கிய கொவிஷீல்ட் கொவிட் தடுப்பூசி ஒரு அரிய பக்க விளைவை ஏற்படுத்தும்" என ஒப்புக்கொண்டதாக த டெலி கிராப் ஊடகம் தெரிவித்துள்ளது.

இரத்த உறைவு மற்றும் இரத்தில் காணப்படும் குருதிச் சிறு தட்டுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால், இது மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே நடக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவை யில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டனில் கத்திக் குத்து தாக்குதல் சிறுவன் உயிரிழப்பு, பலர் படுகாயம்





லண்டனில் மர்ம நபரால் மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்து தாக்குதலில் 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார். பொலிஸ் அதிகாரிகள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவமானது நேற்று லண்டனில் உள்ள சுரங்க ரயில் நிலையத்திற்கு அருகே இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 36 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மனரீதியில் பாதிக்கப் பட்டவர் என பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு; ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்




இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் உள்ள ருயாங் தீவில் எரிமலை மீண்டும் வெடித்து சிதற தொடங்கி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தால் அந்த நாட்டு மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எரிமலை வெடிப்பு குறித்து தொடர்ந்து கண்காணிக் கப்பட்டு வருகிறது என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள் ளது.

இதன்காரணமாக அப்பகுதியில் உள்ள 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்க ளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிமலையை சுற்றி 4 கிலோ மீற்றர் தொலைவுக்கு எந்த பணிகளும் மேற்கொள்ளக்கூடாது எனவும் எரிமலை வெடித்ததால், அருகில் உள்ள சர்வதேச விமான நிலை யத்தை மூடவும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தோனேசியாவின் ருயாங் தீவில் கடந்த 16ஆம் திகதி எரிமலை வெடித்து சிதறியமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் சொந்தங்கள் கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்






கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கக் காரியாலயத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டோர் காணாமல்போன தமது பிள்ளைகளின் படங்களையும் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.


அவர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது உறவுகள் எங்களுடன் கொஞ்சக் காலம் என்றாலும் வாழ வேண்டும் என்று தொடர்ச்சியாக நாம் போராடி வருகின்றோம்.

எமது போராட்டத்தை இதுவரையில் அரசு கவனத்தில் கொள்ளாத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டு நிற்கின்றோம்.

நீதிக்கான எமது போராட்டம் ஆயிரக்கணக்கான பேருடன் ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது நலிவடைந்து போய் பல தாய்மாரின் உயிர்கள் பறிபோனமை மட்டுமே மிகுதி." – என்றனர்.

# மரண அறிவித்தல்



## மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன்

## (மா.க.ஈழவேந்தன்)

யாழ் கொழும்புத் துறையைப் பிறப்பிடமாகவும், கனடா டொறொண்டோ'வை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் (மா.க.ஈழவேந்தன்) 28.04.2024 அன்று 'டொறொண்டோ'வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் கனகசபாபதி–சிவயோகம் இணையரின் அன்புமகனும், அருளாம்பிகை அவர்களின் அன்புக்கணவரும், யாழினி (தமிழ்நாடு), எழிலினி (தமிழ்நாடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரசேந்திரன் (தமிழ் நாடு), சம்பத்குமார் (தமிழ்நாடு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற யோகேந்திரன், இந்திராணி மற்றும் பாலேந்திரா (கொழும்பு), விஜயேந்திரராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவானந்தன் (ஈழநாடு) மற்றும் சண்முகசாமி (கொழும்பு, இலங்கை மத்திய வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேஷ், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், புனிதவதி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரன்(இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு அத்தானும், இளங்கோ, சேரன், மோகன், தயாளன் ஆகியோரின் பெரியப்பாவும், பாலகண்ணன், பாலமுரளி, மீரா, யசோதை, இராதை, ஆரூரன், குமரன், கோகிலா ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், இரா.உத்தமசோழன், மருத்துவர் இரா.தமிழ்க்காவிரி, தமிழழகன், பொழிலன் ஆகியோரின் பாட்டனாரும், திகழ்மாறனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (04.05.2024) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புக்கு:-பாலகண்ணன் +4168848797, சேரன் +4169129363**




# அல்லைப்பிட்டிக்கு நேற்று சொல்ஹெய்ம் குழு விஜயம்

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியிலுள்ள தப்ரபேன் கடலுணவு நிறுவனத்திற்கு ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட குழுவினர் நேற்று விஜயம் செய்தனர்.

இதனுபோது அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கடல் உணவு உற்பத்தி நடைபெறும் இடத்தையும் பார்வையிட்டு பணியாளர்களுடனும் கலந்துரையாடலில் இக்குழு ஈடுபட்டது.

இதன் போது ர எரிக் சொல்ஹெய்ம், நோர்வே நாடாளுமன்றத்தின் தற்போதைய உறுப்பினர் குலாட்டி ஹிமான்/, தப்ரபேன் கடலுணவு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திமோதி ஓ'ரெலி உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர்.







# 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 28 வயது இளைஞர் விளக்கமறியலில்

## காத்தான்குடிப் பிரதேசத்தில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டில் 2 மில்லிக்கிராம் ஐஸ்போதை பொருளுடன் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய ஆண் ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக் களப்பு நீதிவான் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

இதில் கைது செய்யப்பட்டவர் திருமணம் முடித்து ஒரு பிள்ளைக்கு தந்தையாவார். இவர் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார் எனவும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு, கைது செய்யப்பட்டு, நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளார். மூன்று வழக்குகளுக்காக இவருக்கு நீதிமன்ற பிடிவிறாந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவர் 14 வயதும் 7 மாதமும் வயது கொண்ட சிறுமியை காதலித்து திருமணம் முடிப்பதாக அவரை கடந்த 10 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி செய்த முறைப்பாட்டுக்கமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த நபரை 2 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் பொலிஸார் கைது செய்தமையுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கைது செய்யப்பட்டவரை நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கட்டுக்கரைக் குளத்தில் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை அவசியம்

## கட்டுக்கரை குள திட்டமிடல் முகாமைத்துவ குழுவின் தலைவர் வலியுறுத்து

(மன்னார் நிருபர் எஸ்.றொசேரியன் லெம்பேட்)

கட்டுக்கரைக் குளத்தில் பிடிக்கப் பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும். குளப் படுக்கை யில் உள்ள காடுகள் அழிக்கப்படு வதனால் மாவட்டத்தின் சூழல் பாதிப்பு ஏற்படுவதோடு, மழைவீழ்ச்சியும் குறை வடைகின்றது. எனவே இக்காணிகளை மீட்டுக் கொள்ள அனைத்து திணைக் களங்களும், மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்களும் இணைந்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கட்டுக்கரைக் குளத் திட்டமிடல் முகாமைத்துவ குழுவின் தலைவர் எம்.சந்தாம்பிள்ளை சில்வா தெரிவித்தார்.

மன்னார் மெசிடோ நிறுவனம் ஏற்பாடு செய்த விசேட ஊடக சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மன்னாரில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் – கட்டுக்கரைக் குளத்தின் கீழ் தற்போது 31 ஆயிரத்து 400 ஏக் கர் விவசாய செய்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. சுமார் 10 ஆயிரத்திற் கும் மேற்பட்ட விவசாயிகள் குறித்த விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் இந்தக் குளத்தின் கீழ் உள்ள காணிகளுக்கு போது மானதாக காணப்படவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1899 ஆம் ஆண்டு இக்குளத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் இக் குளத் தின் மேல் இருந்த 28 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டு இக் குளத்திற்கு 10 ஆயிரம் ஏக்கர் காணி பறவைகள் சரணாலயம் ஆகவும், இக்குளத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காகவும் ஒதுக் கப்பட்டது.

ஆனால் இக்குளத்தின் மேல் ஒதுக்கப்பட்ட காணியில் தற்போது 1500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக கட்டுக்கரைக் குளத்தின் நீர்ப்பாசன சேவைகள் பாதிக்கப்படுகின்றன. மேலும் இக்குளத் தின் மேல் காணிகளை – குறிப்பாக சுமார் 25 முதல் 30 பேர் வரை – அடாத் தாகப் பிடித்துள்ளனர். இதுவரை காணி களை அடாத்தாக பிடித்தவர்களுக்கு எதிராக எந்தத் திணைக்களமும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வில்லை. நாங்கள் உரிய திணைக்களங் களிடம் முறைப்பாடு செய்தும் முறைப் பாடுகளுக்கு அமைவாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இக்குளத்தை 1932 ஆம் ஆண்டு



நில அளவை செய்து, 1954 ஆம் ஆண்டு இதில் ஒதுக்கப்பட்ட 10 ஆயி ரம் ஏக்கர் காணியும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இதுவரை அதற்குள் காணிகளை பிடித்தவர்களுக்கு எதி ராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. அதே வேளை வன வள பரிபாலகர் திணைக்களம்,எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காததால் விவசாயிகளுக்கு பாதிப்புகள் ஏற்படு கின்றன.

தொடர்ந்து இக்குளத்தில் பிடிக் கப்பட்டுள்ள காணிகளை விடுவிப் பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். குளப் படுக் கையில் உள்ள காடுகள் அழிக்கப் படுவதனால் மாவட்டத்தின் சூழல் பாதிப்பு ஏற்படுவதோடு, மழைவீழ்ச்சி யும் குறைவடைகின்றது. வெப்பம் அதிகரிக்கிறது. எனவே இக் காணி களை மீட்டுக் கொள்ள அனைத்து திணைக்களங்களும், மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்களும் இணைந்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். விவசாயிகள் சார்பாக இந்தக் கோரிக்கையை முன் வைக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

### இரட்டை குளம் வாய்க்கால் விவசாய அமைப்பின் செயலாளர்

இரட்டை குளம் வாய்க்கால் விவசாய அமைப்பின் செயலாளர் ரீ.தாசீஸ் கூறியவை வருமாறு:–

செட்டியார் கட்டையடம்பன் பிர தேசத்தில் அடாத்தாக நீர் பாய்ச்சும் பிரதேசம் எங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்து சட்ட விரோதமாக நீரை எதிர்ப் பக்கமாக திசை திருப்புகின் றனர். கட்டுக்கரைக் குளம் கட்டப்பட்டு 1932 ஆம் ஆண்டிற்கான நில அளவை வரை படத்திற்கு அமைவாக கட்டுக்கரைக் குளம். வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்பு திணைக்களம், பறவைகள் சரணாலயம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டது..

ஆனால் 1500 ஏக்கர் இவ்வாறு பிடிக்கப்படவில்லை. அதில் இருந்த குடும்பங்கள் சில நூறு ஏக்கர் காணி களில் மாத்திரம் விவசாயம் செய் தார்கள். இதனால் நீர்ப் பிரச்சினை தெரியவில்லை. கட்டுக்கரைக் குளம் கட்டப்பட்டு சுமார் 124 ஆண்டுகளின் பின்னர் 1,500 ஏக்கராக அதிகரித்ததன் பின்னர் சனத்தொகையும் அதிக ரித்துள்ளமையினால் எங்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எமக்கு வருகின்ற நீரையும் மறித்து, அவர்கள் திசை திருப்பிக் கொண்டு செல்கின்றனர். இந்த மக்கள் தாங்கள் ஏற்கனவே பிடித்த காணிகளை விற்று விட்டு, புதிய காணிகளை பிடித்து திருத் திக் கொண்டு செல்கின்றனர். இதனால் எமது நீர் அந்த காணிகளுக்கும் செல் கிறது. இப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என நாங்கள் பல தடவை சகல அதிகாரிகளுக்கும் எழுத்தில் கோரிக்கை வழங்கினோம். எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கு சகல அமைப்புக்களும் கையொப்ப மிட்டு மகஜர் கையளித்தோம். ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. எமக்கு தவறான பதில்கள் கிடைத்தது.

இந்த பிரச்சினையை அதிகாரிகள் மட்டத்தில் வைத்திருந்தால் எவ்வித பலனும் கிடைக்காது என்ற காரணத் தால் நாங்கள் நீதிமன்றத்தை நாடி வழக்கு தாக்கல் செய்ய கட்டுக்கரைத் திட்ட குழு சார்பாக நடவடிக்கை முன்னெடுத்து வழக்கு தாக்கல் செய் துள்ளோம்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்குள் விவசாயம் செய்கின்ற மக்களுக்கு எதிராக நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

நான்கு திணைக்களங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள் ளோம். குறித்த காணிகள் நான்கு திணைக்களங்களின் பொறுப்பில் உள்ள காணிகள். அந்தத் திணைக் களங்கள் இதுவரை எவ்வித நடவ டிக்கைகளையும் எடுக்கவில்லை.

பறவைகள் சரணாலயத்தை பொறுத்தவரையில் அந்தத் திணைக் களத்திற்கு ஒதுக்கப்பட்ட காணிகளை அவர்கள் பராமரிக்க முயலவில்லை. மாறாக அதனை விடுத்து மாவட்டத்

தொடர்ச்சி ▼

# சாமானியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றோம்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு





சிறந்த விவசாய பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

மிக குறுகிய காலத்திற்குள் சிறந்த விவசாய பயிற்சி ( GOOD AGRICULTURE PRACTICES) திட்டத்திற்குள் 2000 விவசாயிகளை உள்வாங்கியமை மிகச்சிறப்பான செயற்பாடென ஆளுநர் இதன்போது கூறினார்.

நவீன விவசாய பொறிமுறை தொடர்பான அறிவை இந்த திட்டத்தினூடாக விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

விவசாயம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாக காணப்பட வேண்டும் எனவும், இதற்காக மத்திய, மாகாண அமைச்சுக்களுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைத்து செயற்படுகின்றமை மகிழ்ச்சியளிப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து பல சந்தர்ப்பங்களில் பேசப்படுவதில்லை எனவும், இந்த விடயம் தொடர்பில் அனைவரும் கரிசனையுடன் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக் கொண்டார். அந்தவகையில் சாமானிய பொது மகன் ஒருவர் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பிலும் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாகவும் ஆளுநர் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கான நிலையான மற்றும் சிறந்த சேவையை வழங்க ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம் எனவும் இவ்வாறான செயற்பாடுகளை அனைவரிடமிருந்தும் எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# கட்டுக்கரைக் குளத்தில் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை அவசியம்

தொடர்ச்சி▲

தில் பல புதிய இடங்களை அவர்கள் அடையாளப்படுத்தி வருகின்றனர். எனவே இவ்விடத்தில் அனைத்து அதிகாரி களினதும் ஒத்துழைப்பு எமக்கு தேவை. - என்றார்

### கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.எச்.எம்.நிஹார் கூறியவை வருமாறு:-

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும். எமக்கு உரிய மேய்ச்சல் நிலம் கிடைக்க வேண்டும் என்பதற்காக திணைக்கள தலைவர்கள். உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மேய்ச்சல் தரைப் பிரச்சினை குறித்து கலந்துரையாடினோம். சுமார் 07 வருடங்களாக மேய்ச்சல் தரை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியும் இதுவரை எங்களுக்கு மேய்ச்சல் தரை கிடைக்கவில்லை.

கடந்த வருடம் வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக உடனடியாக மேய்ச்சல் நிலம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்கு இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அதன் பின்னர் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தோம். அதற்கும் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை.

கடந்த வருடம் சுமார் 35 ஆயிரம் மாடுகள் நானாட்டான் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த மாடுகளுக்கான மேய்ச்சல் நிலம் செட்டியார் கட்டையடம்பன் என்ற பகுதியில் உள்ள புல்லறுத்தான் கண்டல் என்ற இடம் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டு அக் காணியை மேய்ச்சல் நிலமாக ஒதுக்கீடு செய்து பிரகடனப்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கடந்த வருடம் மாந்தை மேற்கு பகுதியில் 15 ஆயிரம் மாடுகள் கொண்டு செல்லப்பட்டு அதில் சுமார் 3500 மாடுகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு உள்ளன. அதற்கு எவ்வித நஷ்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை. அதிகாரிகள் பார்வையிட்டு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

தற்போது பால் உற்பத்தியை மேற்கொள்வதிலும் பாரிய சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றோம். மாடுகளுக்குச் சரியான மேய்ச்சல் நிலம் இல்லாமையே காரணமாக உள்ளது. இதனால் மாடுகளை வைத்து வாழ்வாதாரத்தை முன்னெடுப்பவர்கள் பாரிய கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே மாந்தை மேற்கில் அமைந்துள்ள புல்லறுத்தான் கண்டல் மேய்ச்சல் நிலமும் நானாட்டான் பிரதேசத்தில் ஆற்றுக்கு பின் பகுதியில் அமைந்துள்ள மேய்ச்சல் நிலமும் எங்களுக்கு பெற்றுத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கால்நடை வளர்ப்பாளர்கள் சார்பாக முன் வைக்கிறேன். - எனத் தெரிவித்தார்.




# போலி முகநூல் கணக்கு ஒன்றுக்கு எதிரான வழக்கை ஏற்றது திருகோணமலை நீதிமன்றம்

(அப்துல்சலாம் யாசீம்)

போலி முகநூல் பதிவொன்றிற்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின்கீழ் இந்த வழக்கை சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார். குறித்த மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார்.

மெய்யுறுதிப்படுத்தப்படாத முகநூல் நிகழ்நிலைக் கணக்கினை பயன்படுத்துபவரது ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், சம்பந்தப்பட்ட முகநூல் கணக்கு பயன்படுத்தப்படும் அமைவிடம், அவற்றோடு தொடர்புடைய ஏனைய நிகழ்வுகள் பற்றிய விடயங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், போன்ற விண்ணப்பங்களை அவர் முன்வைத்தார். முகநூல் நிறுவனத்திடமிருந்தும், டயலொக் நிறுவனத்திடமிருந்தும் மேற்குறித்த விடயங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விவரங்களை உடனடியாகப் பெறுவது தொடர்பாகவும் அவற்றை உடனடியாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும் தேவையானதும், அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு 01இல் செயற்படுகின்ற குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணணிக் குற்றங்கள் விசாரணைப் பகுதியின் சமூக ஊடகப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிடுவதற்கான கட்டளையைப் பிறப்பிப்பிக்குமாறு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அந்த விண்ணப்பங்களை ஏற்ற மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா அவற்றுக்குரிய கட்டளையை பிறப்பித்திருந்தார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் இவ்வாறான வழக்கு தாக்கல் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.



# திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு ரூ. 80 ஆயிரம் தண்டம்

(ந.லோகதயாளன்)

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் வாணிபம் ஒன்றில் திகதி காலாவதியான பொருள்கள், வண்டு மொய்த்துப் பழுதடைந்த பொருள்கள், சுட்டுத்துண்டு உரிய முறையில் இடப்படாத பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பலசரக்கு விற்பனை நிலைய உரிமையாளருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் வாணிபம் ஒன்றில் இந்தத் தவறுகளைக் கொண்டிருந்த பலசரக்கு விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது மேலதிக நீதிவான் செ.லெனின்குமார் வர்த்தக நிலைய உரிமையாளரிற்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததோடு கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார்.



# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு பிரிட்டிஷ் தூதுவர் குழு நேற்று விஜயம்!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் அவரது அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு நேற்று வருகை தந்து மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையிலான குழுவினருடனான மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள வளங்கள் பற்றிய விவரங்கள்

மாவட்ட செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமாரினால் முன்னளிக்கை செய்யப்பட்டது.

மாவட்டத்தின் பிரதான உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா உள்ளிட்ட அனைத்துத் துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் தூதுவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

தூதுவரை கௌரவிக்கும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்களை வழங்குவதற்கு தேவையான உதவிகள் வழங்க முன்வர வேண்டும் என அரசாங்க அதிபர் தூதுவரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தூதுவர் முதல் முறையாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்திருக்கின்றார் எனவும், ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டத்தினூடாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளைப் பார்வையிட்டார் எனவும், அரசாங்க அதிபருடன் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்டார் எனவும் இதன் போது கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வீ. நவநீதன், மாவட்ட செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கொழும்பில் இன்றைய தினம் விசேட போக்குவரத்து திட்டம்

மே தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரை அண்மித்து இன்று விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்காக 1,200 இற்கும் அதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என கொழும்பு நகர வாகனப் போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் புஷ்ப குமார தெரிவித்துள்ளார்.



அத்தியாவசிய காரணிகள் தவிர்த்து இன்று காலை 11 மணிக்கு பின்னர் கொழும்பு வீதிகளுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# சிங்களத்தை நம்பிப் பயனில்லை அதுவேதான் சிவராமின் பட்டறிவு

## நினைவு நிகழ்வில் பேராசிரியர் ரகுராம் விளக்கம்

(ந.லோகதயாளன்)

சிங்கள அரசியல் சக்திகளை தமிழர்கள் ஒருபோதும் நம்பவே முடியாது என்பதுடன் சிவராம் அண்ணையின் பட்டறிவின் வழியே சிங்கள அரசியல் சக்திகளுக்கான ஆதரவாக தமிழர் தரப்பின் நிலைப்பாடு எப்போதுமே இருக்க முடியாது என்றும், அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்படுமாக இருந்தால் அது ஒரு தவறான வழி காட்டலாகத்தான் இருக்கும் எனவும் பேராசிரியர் சி.ரகுராம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.




யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் முன்னெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று சிவராம் நினைவு உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெற்கு அரசியலை சிவராம் நன்றாக உணர்ந்திருந்தார். தெற்கு அரசியலில் அவருக்கு ஆரம்பத்தில் ஒரு நாட்டம் இருந்தது. ஆரம்ப காலங்களில் அவர் சார்ந்த அமைப்பு ஜே.வி.பியுடன் கொண்டிருந்த தொடர்புகள் வழியாக தெற்கிலே எங்களுடைய நியாயங்களை, எங்களுடைய போராட்டத்தின் வலுவை, எங்களுடைய போராட்டத்தின் செல்நெறியை எடுத்துச் செல்லலாம் என்ற மிகப்பெரிய ஆர்வம் அவரிடம் இருந்தது.

அதனை அவரது பல எழுத்துகளிலும் வெளிப்படுத்தியிருந்தார். தெற்கில் உள்ள புத்திஜீவிகள், அரசியல் கட்சியினர், சிவில் சமூகத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலதரப்பினருடன் பல சந்திப்புகளையும் சிவராம் அண்ணை நடத்தியிருந்தார். அவருக்கு ஏராளம் சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். பத்திரிகை நண்பர்கள், ஊடகவியலாளர்கள், கட்சி தரப்பினர் எனப் பலருடன் நெருங்கிய தொடர்புடன் இருந்தார்.

ஆனால் அவர் ஒரு கட்டத்தில் மிகத்தெளிவான ஒரு முடிவுக்கு வந்தார். சிங்களத்தை நாங்கள் மாற்ற முடியாது. சிங்கள அரசியல்வாதிகளை நாங்கள் மாற்ற முடியாது. சிங்கள அரசியல் சூழலை எங்களால் மாற்ற முடியாது என்ற தெளிந்த நிலைப்பாட்டிற்கு சிவராம் அண்ணை வந்தார்.

அவர் சந்தித்த பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சியினர் என சகல தரப்பினரும் ஒரு வரையறைக்குள் இருந்தார்கள். ஆழமாக அவர்களுக்குள் இறங்கியிருக்கக்கூடிய கருத்தியல் தளத்திற்கு அப்பாலே அவர்கள் எங்களுக்காக சிந்திப்பார்கள் அல்லது எங்களுடைய நியாயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதெல்லாம் ஒரு பொய்க்கதை என்பதை அவர் மிகத் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர்களாகிய நாங்கள் இன்று அந்த சந்தியில்தான் வந்து நிற்கின்றோம். எந்தக் கட்டத்திலும் சிங்கள அரசியல் சக்திகளை, சிங்கள அரசியல்வாதிகளை, அடுத்துவரக்கூடிய ஆளும் தரப்புகளை நாங்கள் நம்பவே முடியாது என்பதனை அன்றில் இருந்து இன்றுவரை வரலாறு எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லி வந்தாலும் கூட அதை மறுத்து நாங்கள் குறுக்கோட்டம் ஓடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றோம்.

உண்மையில் சிவராம் அண்ணாவின் இன்றைய நினைவு மீட்டலிலே சொல்லக்கூடிய விடயமும் அதுதான். எங்களை விடவும் சிங்கள அரசியல் கட்சிகளுடன், சமூக செயற்பாட்டாளர்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தவர். ஆழமான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தவர். அவற்றினூடாக அவர் பெற்ற அனுபவம் என்பது சிங்கள அரசியல் சக்திகளையோ, ஆளும் தரப்புகளையோ அல்லது அடுத்து வரும் நம்பிக்கைதரக் கூடியதாக நாங்கள் கற்பனை செய்கின்ற விடயங்களையோ அவர் நம்பத்தயாராகவே இல்லை.

சிவராம் அண்ணையின் நினைவு மீட்டல் மூலமாக எங்களுக்கு கிடைக்கின்ற மிக முக்கிய செய்தி இதுதான். சிங்களத்தின் இன்றைய அரசியல் சூழலோடு சிவராம் அண்ணாவை மீட்டு பார்க்கின்றபோது எங்களுக்கு கிடைக்கின்ற முக்கயமான செய்தி நாங்கள் யாரையும் நம்பமுடியாது. எவரையும் நம்பமுடியாது. யாருக்காகவும் எங்கள் பெறுமதியான வாக்குகளை அளிக்கவும் முடியாது. ஆகவே எங்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் எதுவென்பதை – எது சரியான தெரிவென்பதை – அது பொதுவேட்பாளராக இருக்கலாம் அல்லது நாங்கள் வாக்களிக்காமல் ஒதுங்கி இருக்கலாம், இந்த இரண்டு தெரிவுகளிலே எது சரியானது என்பதனை நாங்கள் விஞ்ஞானபூர்வமாக, அறிவியல்பூர்வமாக தெரிவு செய்யவேண்டும்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளுமே ஒருமித்த புள்ளியில் இருப்பதை நான் பார்க்கிறேன். சிங்கள அரசியல் சக்திகளை நாங்கள் நம்ப முடியாது என்பதாகும். நாங்கள் இந்த தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாகவோ நிராகரிப்பதாகவோ இருந்தாலும் சரி, பொது வேட்பாளரை தேடுவதாக இருந்தாலும் சரி இந்த இரண்டு நிலைப்பாடுகளுமே ஏதோ ஒரு வகையில் அந்த புள்ளியில் தான் வந்து நிற்கின்றன. அது நாங்கள் தெற்கு அரசியல் சக்திகளை நம்ப முடியாது. எதிர்காலத்திற்காக நாங்கள் எங்களை பணயம் வைக்க முடியாது என்பதைத் தான் சொல்கின்றன.

இந்த கட்டத்தில்தான் நாங்கள் எது சரியான முடிவு என்பதை கட்சி அரசியல் சார்ந்தில்லாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி ஒரு விஞ்ஞானபூர்வமாக, அரசியல் அறிவுபூர்வமாக, நாங்கள் தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். முடிவு எங்கள் கரங்களிலேயே இருக்கின்றது.

சிவராம் அண்ணாவின் நினைவு மீட்டலின் அடிப்படையில் ஒன்றை மட்டும் உறுதியாக கூற முடியும். சிங்கள அரசியல் சக்திகளுக்கான ஓர் ஆதரவாக எப்போதுமே இருக்க முடியாது என்பதனை நிச்சயமாக கூற முடியும். அது ஒரு தவறான வழிகாட்டலாகத்தான் இருக்கும் என்ற சிவராம் அண்ணாவின் பட்டறிவை இன்றைய நாளில் எங்களின் மனங்களில் நிறுத்திக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மிக துரிதமாக முடிவுகளை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதலுக்குக் கோரும் விசாரணையை யுத்த அழிவு விவகாரத்திலும் பீரிஸ் கோரவேண்டும்

## முன்னாள் வடமாகாகண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு 'சர்வதேச ஒத்துழைப்பும் கண்காணிப்பும் அவசியம்' என்ற பீரிஸின் கருத்தை மகிழ்வுடன் வரவேற்பதாக முன்னாள் வடமாகாகண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கூறியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் மூன்று தேவாலயங்களிலும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் நடைபெற்றது. இதில் முந்நூறுபேர் வரை உயிரிழந்தனர். ஐந்நூறுபேர் வரை படுகாயமடைந்தனர். இது கடந்த ஐந்தாண்டுகளாக கொழும்பு அரசியல் தளத்தில் பேசுபொருளாக உள்ளது.

இதுவரை விசாரணை அறிக்கை வெளிவரவில்லை. இந்த விடயம் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதமும் நடைபெற்றுள்ளது. மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பேராசிரியர் பீரிஸ் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கோ நாட்டின் ஏனைய மக்களுக்கோ நம்பிக்கை கிடையாது என்றார்.

விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும் சர்வதேச தரப்பின் கண்காணிப்பும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைக்கான சிறப்பு பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். விசாரணை பூரணமாக அமைய வேண்டும் என்றும் கூறினார்.

சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது ஒன்றும் புதிதல்ல. முன்னர் உதலாகம ஆணைக்குழு விசாரணைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. 1948ஆம் ஆண்டு 14ஆம் இலக்க விசாரணை



ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சிறப்பு பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்ற மிக முக்கியமான கருத்துகளையும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதியை நிலைநாட்டஅவர் துணிச்சலுடன் தெரிவித்த இக்கருத்துகளுக்கு தமிழினம் தலைவணங்குகிறது. உலகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர் அவர். பலநூறு மாணவர்களுக்கு சட்டம் கற்பித்தவர் அவர்.

சட்டத்தின் மூல தத்துவங்களில் முக்கியமானது சட்டம் அனைவருக்கும் சமம் மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி என்பதையும் நாம் சொல்லி அவர் அறிய வேண்டியவர் அல்லர்.

முந்நூறுபேர் கொல்லப்பட்டு, ஐந்நூறுபேர் படுகாயமடைந்த தாக்குதலுக்கு நீதி கோரி அவர் தெரிவித்த மேற்படி கருத்துகளின் மூலம் இந்த நாட்டில் உள்ளக விசாரணைகள்மீது மக்களுக்கு நம்பிக்கை கிடையாது, சர்வதேச கண்காணிப்பின்கீழ் சர்வதேச ஒத்துழைப்புடனான விசாரணை அவசியம் என்பதை அவரும் அடித்துச் சொல்லியிருக்கின்றார். அத்தோடு பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட, இலங்கையர் எவருமற்ற, நடுநிலையான சர்வதேச விசாரணைக்குழு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்து யுத்தத்தில் சம்பந்தப்படாத நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும், மேலும் பல்லாயிரம்பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் வெளிப்படுத்திய அறிக்கையையும், அதுபற்றிய பூரண விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தையும், அதன் பிரகாரம் சர்வதேச நீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்கள் ஆகியோரை இணைத்து போர்க்குற்றம், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும், இவை இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்றும் இலங்கையில் சிறந்த நீதித்துறை உண்டு, உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நாம் எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரம்புமீறி செயற்படுகிறது என்றும் மூர்க்கமாக எதிர்த்த அவர், இன்று மனம் திருந்தி அத்தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று நாம் நம்புகின்றோம்.

எனவே உயிர்த்த ஞாயிறன்று பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க தாங்கள் கூறிய அதே அடிப்படையில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலப்புப் பொறிமுறை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாலும் பல்லாயிரம்பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்க நாடாளுமன்றத்தில் பேசி அவர் வழியேற்படுத்துவார் என நம்புகின்றோம்.

தமிழினத்திற்கு நீதிகோரும் அவரது நாடாளுமன்ற உரையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். – என்றார்.

# ஊழல் வழக்கு ஒன்றிலிருந்து மஹிந்தானந்தவுக்கு விடுதலை

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை ஊழல் வழக்கொன்றிலிருந்து விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டார்.

அமைச்சராக செயற்பட்ட சந்தர்ப்பத்தில் முறையற்ற விதத்தில் ஈட்டிய 274 லட்சம் ரூபா பணத்தினூடாக பொரளை கின்சி வீதியில் அதிசொகுசு வீடொன்றை கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பில், மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராக இலஞ்ச,



ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டாளரான வசந்த சமரசிங்க உள்ளிட்டோர் முறைப்பாட்டின் சாட்சியாளர்களாக அழைக்கப்படவில்லை எனவும் பிரதிவாதியால் வீட்டைக் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்ட பணம் முறையற்ற விதத்தில் ஈட்டப்பட்டுள்ளதாக நிரூபிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் தரப்பு தவறியுள்ளதாகவும் நீதிபதி தனது உத்தரவின் போது குறிப்பிட்டார்.

அதற்கமைய குற்றஞ்சாட்டப்பட்டவர் நிரபராதி என கருதி அவரை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிப்பதாக நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

# காரைதீவில் நேற்று தொழுநோய் கள ஆய்வு நான்கு பேர் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை




(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் வெட்டு வாய்க்கால் பகுதியில் தொழுநோய் கள ஆய்வுநேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

காரைதீவு சுகாதார உணவு அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான சுகாதார குழுவினர் நேற்று அப்பகுதியில் வீடு வீடாக விஜயம் செய்து ஆய்வு செய்தனர். இதில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தொழுநோய் கட்டுப்பாட்டு கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஏலவே இனங்காணப்பட்ட நான்கு தொழுநோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கையும் ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள் உரிய சிகிச்சை பெறாமல் இருந்து வந்தமை அவதானிக்கப்பட்டது.

# திரியாயில் விகாராதிபதியினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாயக் காணிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை!



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை குச்சவெளி – திரியாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆத்திக்காட்டுவெளி பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளில் பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் மேற்கொண்டு வருகிறார் எனவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தமது வாழ்வாதாரத்திற்காக மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆத்திக்காடு பகுதியில் உள்ள 88 ஏக்கர் காணி பானாமுரே திலகவங்ச நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரின் பெயரில் தற்காலிக இடாப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 3 வருடங்களாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அரசாங்கத்திடம் இருந்து 20 சிங்கள மக்களின் பெயரில் மானியப் பசளை பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் பல வருட காலமாக பரம்பரை பரம்பரையாக குறித்த காணிகளில் குச்சவெளி மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர் எனவும், யுத்த நிலைமையின் காரணமாக இடம்பெயர்ந்து சென்று மீண்டும் திரும்பும்போது அந்தப் பகுதியில் இருந்த உறுதி மற்றும் பேமிட் காணிகள் அடங்கலாக பெருமளவான விவசாயக் காணிகள் வன வள பாதுகாப்புத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்ததாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட காணிகள் அப்பகுதியில் உள்ள சப்தநாக பப்பத வன சௌசுன விகாரைக்குரியது என குறிப்பிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு புத்த பிக்கு ஒருவரின் தலைமையின் கீழ் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள சப்தநாக பப்பத வன சௌசுன விகாரைக்காக 2020.10.02 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பூஜா கிராண்ட் மூலம் 20.2343 ஹெக்டேயர் காணி 2020.05.26ஆம் திகதியில் இருந்து 30 வருடகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்காணிக்குள் மக்களுடைய உறுதிக் காணிகளும் உள்ளடங்குகின்றன எனப் பிரதேச செயலகத்தினால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.05.2024


மேஷம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன் களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்க ளுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்த லாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத் தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடு-த்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடி வெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


ரிஷபம்

இன்றைய நாளை உங்களுக்கு சாத கமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள். இது பயன்தரத் தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலை யோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணி யில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராம ரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத் துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும்.


மிதுனம்

நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைக ளைக் காண்பீர்கள். அதிக சிந்த னையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவன மாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதி யாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன் றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாயுப்புள்ளது. தியானம் மேற் கொள்வது சிறந்தது.


கடகம்

இன்று அமைதியின்றி காணப்படு வீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறை யும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக் கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனர மைப்புக்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக் கியத்தில் எச்சரிக்கை தேவை.


சிம்மம்

இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதட்டம் காணப்படும். உங்கள் ஆரோக் கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்த கைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.


கன்னி

இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும்.குடும் பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய் வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.


துலாம்

உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரி யங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்துக்கொள்ள இன் றைய நாளைப் பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டுச் சிறப்பாகப் பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சனை ஏதும் காணப்படாது.


விருச்சிகம்

இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பனியின் தரம் மேலதி காரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.05.2024




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும்.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவிற்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | Kelsey Homes 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# உலகமே கொண்டாடும் உழைக்கும் மக்கள் தினம்!

## இன்று மே தினம்



ஆர்.நடராஜன் ஹரன்

உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மே முதல் திகதியை மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

குறைந்த வேலை நேரத்துக்காக நடத்தப்பட்ட தொழிலாளர்களின் போராட்டம், மே தினம் உருவாவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தது. தொழிலாளர்களின் இந்தக் கோரிக்கை மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அமெரிக்காவில் தொழிற்துறை ஒரு அமைப்பாக வளர்ந்த பொழுது இப்போராட்டம் வெளிப்பட்டது.

இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம். சாசன இயக்கம் 6 முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை.

1830 ஆம் ஆண்டு, பிரான்சில் நெசவுத் தொழிலாளர்கள் தினமும் 15 மணி நேரம் உழைத்து வந்தனர்.

இதனை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1834 இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற வாசகத்தை முன்வைத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், இது தோல்வியில் முடிந்தது. ஆஸ்திரேலியா விலுள்ள மெல்போர்னில் கட்டிடத் தொழிலாளர்கள் 1856 இல் முதன்முதலாக 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர்.

1896 ஏப்ரலில் லெனின் மே தினததுக்காக எழுதிய சிறுபிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து விரிவாக அலசினார். மேலும், ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். தொழிலாளி களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது எனலாம்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து, அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இந்த இயக்கம் 1886, மே 1 ஆம் நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது. இந்த இயக்கமே மே தினம் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம்.

1889 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேசத் தொழிலாளர் நாடாளுமன்றம் கூடியது. 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட் டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவு செய்தனர். 1890 மே 1 ஆம் நாள், அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே, மே முதல் நாள் சர்வதேச தொழிலாளர் தினமாக – மே தினமாக வருவதற்குக் காரணமாக அமைந்தது. அடுத்த ஆண்டிலிருந்து உலக நாடுகள் பலவற்றில் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.

இந்த நாட்டில் (அமெரிக்காவில்) ஆரம்ப நாள்களில் பல வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. ‘அதிக ஊதியம் வேண்டும்’ என்பதுதான் இந்த வேலை நிறுத்தங்களில் முக்கிய கோரிக்கையாக எழுப்பப்பட்டது. இருந்த போதிலும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வகுத்த போதெல்லாம் குறைந்த வேலை நேரம், சங்கம் சேரும் உரிமை போன்ற பிரச்சினைகளை முன்வைத்தனர். தொழிலாளர்கள் வெகுவாக சுரண்டப்பட்ட காலகட்டம் அது. நீண்ட வேலை நேரங்கள் அவர்களை மேலும் துன்பப்படுத்தின. எனவே வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கையாக எழுப்பப் பட்டது.

‘அதிகாலை முதல் அந்திசாயும் வரை’ என்பது தான் அப்போதெல்லாம் வேலைநாள்.

தொடர்ச்சி ▼



# உலகமே கொண்டாடும் உழைக்கும் மக்கள் தினம்!

தொடர்ச்சி▲

இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே வெளிக்காட்டினர். பதினாறு, பதினேழு ஏன் பதினெட்டு மணிநேர வேலை என்பதெல்லாம் அப்போது சாதாரண விஷயங்கள், 1806-ம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்கள் மீது சதி வழக்கு போடப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது தொழிலாளர்கள் பத்தொன்பது, இருபது மணி நேரங்கள் வேலை வாங்கப்பட்டார்கள் என்ற விஷயம் வெளியே வந்தது.

1820 மற்றும் 30 களில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று பற்பல வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கை பல தொழில் மையங்களில் முன் வைக்கப்பட்டது. பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம்தான் உலகின் முதற் தொழிற்சங்கமாக கருதப்படுகிறது. இந்த தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்புதான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின.

பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கையை முதன் முதலாக வைத்த பெருமை இச்சங்கத்துக்கே உண்டு. 1827 இல் பிலடெல்பியாவில் கட்டடங்கட்டும் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில்தான் இந்தக் கோரிக்கை பிரதானமாக வைக்கப்பட்டது.

1834 இல் நியூயோர்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர். நாளொன்றுக்கு அவர்கள் பதினெட்டிலிருந்து இருபது மணி நேரம் வேலை செய்ய வேண்டி வந்தது என்ற செய்தியை அப்போது வெளியான 'தொழிலாளருக்காக வாதிடுபவன்' என்ற பத்திரிகை வெளியிட்டது. பத்துமணி நேர வேலைநாளுக்கான இந்தப் ஒபோராட்டங்கள் விரைவிலேயே ஒரு இயக்கமாக உருவெடுத்தது. 1837 இல் ஏற்பட்ட நெருக்கடி ஒரு தடையாக இருந்த போதிலும் வேன் பியுரன் தலைமையிலான அரசு, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பத்து மணி நேர வேலைநாள் அறிவித்தது. எல்லோருக்கும் பத்து மணி நேர வேலை நாள் என்பதற்காக போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல தொழிற்சாலைகளில் இந்தக் கோரிக்கை வெற்றியடைய, உடனேயே தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை நாள் என்ற கோஷத்தை எழுப்பினர்.

தொழிற்சங்க இயக்கத்தின் அதிவேக வளர்ச்சியால் 1850 களில் இக்கோரிக்கை புதிய உத்வேகத்தை அடைந்தது. 1857 இல் ஏற்பட்ட நெருக்கடி இந்த உத்வேகததுக்கு ஒரு தடையானது. இருந்த போதிலும் நன்கு வளர்ச்சி பெற்ற தொழிற்சங்கங்கள் அதற்கு முன்பே இக்கோரிக்கையை அடைந்தன. இவ்வாறு குறைந்த வேலை நேரத்துக்கான போராட்டம் அமெரிக்காவில் மட்டும் நிகழவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் சுரண்டப்பட்ட எல்லா வளரும் நாடுகளிலும் இப்போராட்டங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக வெகு தூரத்தில் இருந்த ஆஸ்திரேலியாவில் கட்டிடத் தொழிலாளர்கள் '8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு' என்ற கோரிக்கையை முன் வைத்து 1858 இல் அதை அடைவதில் வெற்றியும் பெற்றனர்.

## எட்டு மணி நேர இயக்கம் அமெரிக்காவில் தொடங்கியது

1884 இல் அமெரிக்காவில் 8 மணி நேர இயக்கத்தின் போது வெடித்த போராட்டங்கள்தான் மே தினம் உருவாவதற்கு நேரடியான காரணமாய் அமைந்தன. ஆனாலும் இதற்கு ஒரு தலைமுறை முன்பே 'தேசிய தொழிற்சங்கம்' குறைந்த வேலை நேரத்துக்கான கோரிக்கையை முன்வைத்து பரந்த இயக்கத்தையே நடத்தியது. 'தேசிய தொழிற் சங்கம்' அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக அப்போது விளங்கியது.

1886 மே முதல் நாள் முதல் சட்டபூர்வமான வேலைநாள் என்பது எட்டு மணி நேரம்தான் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு தீர்மானிக்கிறது. எனவே எல்லா தொழிலாளர் அமைப்புகளும் தங்கள் அதிகார வரம்பிற்குரிய இடத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இத்தீர்மானத்துக்கு ஏற்ப தங்கள் சங்க விதிகளை அமைத்துக் கொள்ளுமாறு இம்மாநாடு பரிந்துரைக்கிறது.

எட்டு மணி நேர வேலை நேரத்தை எப்படி கொண்டு வருவது என்பது பற்றி கூட்டமைப்பு தீர்மானத்தில் ஏதும் சொல்லப்படவில்லை. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கு உட்பட்டது. தங்கள் உறுப்பினர்கள் வேலை செய்யும் கடை, ஆலை, சுரங்கங்களில் போராடி இன்னும் அதிகமான தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும் என்பதை அது அறிந்திருந்தது. அப்போதுதான் எட்டு மணி நேர வேலை நாளை சட்டபூர்வமாக்க வேண்டும் என்பதை அறிவிக்க முடியும் என்பதையும் உணர்ந்திருந்தது.

1886, மே முதல் நாள் 8 மணி நேர வேலைக்காக போராடும் தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டே "தீர்மானத்துக்கேற்ப சங்க விதிகள் அமைய வேண்டும்" என அறிவித்திருந்தது.

வேலை நிறுத்தத்தின் போது வெகு நாள்கள் வெளியே தங்க நேரிடலாம். அப்போது சங்கத்தின் உதவி தேவைப்படும். மேலும் இவ்வேலை நிறுத்தம் தேசிய அளவில் நடைபெறுவதாலும் இணைக்கப்பட்டுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் கலந்து கொள்வதாலும் அவர்கள் விதிப்படி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு தங்கள் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமாகிறது. இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த கூட்டமைப்பானது தற்போது உள்ள அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பை போலவே சுயேச்சையாக கூட்டமைப்பு முறையில் ஏற்பட்டது.

இன்று பல தரப்பட்ட நிகழ்வுகள் எமது இலங்கை திருநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்று வருகின்றன. தற்போது இது அரசியல் கட்சிகளின் விசேட கூட்டங்களாக பரிணமித்துள்ளதைக் காண்கின்றோம். அன்று தொழிலாளர்களுக்காய் குரல் கொடுத்த மே தினம் இன்று அரசியலுக்காய் பயன்படுத்தப்படுகின்றதா எனும் என்னத்தில் நோக்கத்தோன்றுகின்றது.

எது எப்படி இருப்பினும் நாம் அனைவரும் எல்லா வற்றையும் மறந்து அனைவரும் தொழிலாளர்கள் எனும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து இன்றைய இரத்தம் சித்தி போராடிப்பெற்ற இந்த மே தினத்தைத் தொழிலாளர்களின் எதிர்கால கனவுகளின் கோரிக்கைகள் வெற்றி பெற வாழ்த்தி பிரார்த்திப்போம்.

**"உலகில் ஒருவன் முதலாளி மற்றவர் எல்லாம் தொழிலாளி....இதுவே உலக நியதி..."**

# பொறுப்புக் கூறக் கூடிய அரசை நாம் கட்டியெழுப்ப வேண்டும்!

## மேதினச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

தேர்தல் ஆண்டுக்கு வந்திருக்கிறோம். இந்த முறையும் ஏமாற்று பேரணிகளுக்கு ஏமாறாமல் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் சொந்த காலில் நிற்கச் செய்யும் பொறுப்புக் கூறக் கூடிய அரசைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

இதன் பிரகாரம், இந்த ஆண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களை ஒடுக்கும் இந்த பயங்கர அரசை விரட்டியடித்து மக்கள் சார், மக்களுக்காக அர்ப்பணித்துச் செயற்படும் அரசையும், தலைவரையும் நியமித்து மீண்டும் ஒரு நாடாக எழுந்து நிற்க வேண்டிய தருணத்துக்கு வந்துள்ளோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

பல வருடங்களாக, பல பாரதூரமான அவலங்களை எதிர்கொண்ட, நமது நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் மே தினத்தைக் கொண்டாடி வருகின்றனர்.

இந்தப் பயங்கரமான அவலத்தில் எந்த மாற்றமும் இல்லாமலே, இந்த ஆண்டு மே தினத்தையும் நமது நாட்டு தொழிலாளர்கள் தலைமையில் ஒட்டுமொத்த மக்களும் கொண்டாடுகின்றனர்.

போலியான அலை ஊடாக திறமையற்றதொரு ஜனாதிபதியை பதவியில் அமர்த்தி நாடே வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

எஞ்சியவை மக்கள் ஆணையை இழந்த நிழல் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலை



யில் இந்த வருடம் மே தினம் கொண்டாடப்படும் போதும் எமது நாட்டு உழைக்கும் மக்கள் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் நிலையில், தற்போதுள்ள வாழ்க்கைச் செலவுக்கு சற்றும் பொருந்தாத சம்பளத்தால் வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் மிகவும் அவலம் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தற்போதைய அரசு தேசிய கடனை மறுசீரமைப்பதில் பெரும் செல்வந்தர்கள், நட்பு வட்டார நண்பர்களைத் தவிர்த்து உழைக்கும் மக்களின் சேமலாப நிதியங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை வார்த்தையால் சொல்லி முடிக்க முடியாது.

அவ்வாறே,நாட்டின் பொருளாதார இயக்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் பல்லாயிரக் கணக்கில் மூடப்பட்டு வருவதால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் தலைவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் கூட வாய் திறக்காத இத்தருணத்தில், நாட்டின் மாற்று அரசாங்கமாகிய நாம் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம்.

அப்போதிருந்து, இந்த பயங்கரமான சூழ்நிலையை நாங்கள் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நாங்கள் தொடர்ந்து எச்சரித்தோம், அது அனைத்தும் இன்று யதார்த்தமாகிவிட்டது.

நாம் இப்போது தேர்தல் ஆண்டுக்கு வந்திருக்கிறோம். இம்முறையும் ஏமாற்று பேரணிகளுக்கு ஏமாறாமல் இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் சொந்த காலில் நிற்கச் செய்யும் பொறுப்புக் கூறக் கூடிய அரசைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இதன் பிரகாரம், இந்த ஆண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களை ஒடுக்கும் இந்த பயங்கர அரசை விரட்டியடித்து மக்கள் சார், மக்களுக்காக அர்ப்பணித்துச் செயற்படும் அரசாங்கத்தையும், தலைவரையும்நியமித்து மீண்டும்ஒரு நாடாக எழுந்து நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

இதனை அடையும் பொருட்டு, இன, மத, சாதி வேறுபாடின்றி நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன். உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை ஒரு நாளில் மட்டும் அல்லாது வருடம் முழுவதும் பாதுகாக்க ஒன்றுபடுவோம்.– என்று தெரிவித்துள்ளார்.

# உழைப்பவர் உரிமை வெல்ல தமிழர் தேசம் தலை நிமிரும்!



## உறுதி கொள்வோம் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

உழைக்கும் மக்களின் உரத்த உணர்வுகளை உலகக்குப் பிரகடனம் செய்யும் மே நாளில், தமிழர் தேசம் தலைநிமிர – சரியான திசை வழியில் அணி திரள உறுதி கொள்வோம்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் மே தினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

உலகெங்கும் விரவிக் கிடந்த தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் தகர்க்க – உரத்த நியாயங்கள் வெல்ல, அனைத்து மக்களும் ஒன்றிணைந்து முயன்றதற்கான வெகுமதியே, இன்றைய மே தினமும், தொழிலாளர் உரிமைகளுமாகும்.

இந்த வரலாற்றுப் படிப்பினை எமக்கும் முன்னுதாரணமாய் நிமிர்ந்து நிற்கின்றது.

சரிநிகர் சமனென்ற உரிமைகளை பெற்றவர்களாய் எமது மக்கள், எமது தாயகமெங்கும் உறுதியாக வாழ வேண்டுமாயின் பலமான பொருளாதாரம் அவசியம் என்ற புரிதலின் அடிப்படையிலேயே, எமது மக்களுக்கான பல்வேறு பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கும் முயற்சியில் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆனால், பிரச்சினைகளற்ற – கௌரவமான வாழும் சூழலை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வார்களாயின், தங்களுடைய வெற்று அரசியல் சூனியமாகிவிடும் என்று அஞ்சுகின்ற சிலர், எமது முயற்சிகளுக்கு சேறடிக்கும் கனவோடு ஒன்றுபட்டும் நிற்கின்றனர்.

காலம் காலமாக ஏமாற்றப்பட்ட வடுக்களுடன் இருக்கும் எமது மக்கள், தங்களுடைய தீர்மானங்களே வடுக்களை ஏற்படுத்துகின்றவர்களை வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை உணர்ந்து கொள்வதன் மூலம் சரியானவர்களுக்கு மேலும் பலம் சேர்க்க வேண்டும்.

அன்றாடப் பிரச்சினைகள், அபிவிருத்தி, அரசியல் தீர்வு போன்றவற்றை நிவர்த்தி செய்யும் எதிர்பார்ப்புக்களை மனதில் சுமந்திருக்கும் எமது மக்கள், எமது மதிநுட்ப சிந்தனைகளை ஏற்று நடைமுறை சாத்திய வழிமுறையில் திரண்டெழ வேண்டும்.

தாயக தேசமெங்கும் தமது எதிர்பார்ப்புக்களை நிலைநிறுத்த எமது மக்கள் இனிவரும் கலங்களை தம் கைகளில் எடுப்பர்.– என்றுள்ளது.

# தொழிலாளர் வர்க்கம் மீட்சி பெற அர்ப்பணிப்போடு செயற்படுவோம்

## மே தினச் செய்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

தொடர்ச்சியாக மிதிக்கப்படுகின்ற தொழிலாளர் வர்க்கம் மீட்சி பெற வேண்டும். அதற்காகவே நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். இந்த தேர்தல் ஆண்டில் தமது முழுப் பலத்தையும் ஒருங்கிணைத்து ஒடுக்கப்படும் மக்களாகிய நாம் கட்டுக்களை உடைத் தெறிந்து – விடுதலை பெறுவோம் என்று உறுதி பூணுவோம்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலக தொழிலாளர் தினமாகிய இன்று தொழிலாளர் வர்க்கத்துக்கு எனது வாழ்த்துதல்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

எமது நாட்டில் இன்று தொழிலா ளர்கள் சுரண்டப்படுவது உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. விசேடமாக பொருளாதார சிக்கலில் அகப்பட்டுள்ள இந்த காலகட்டத்தில் இதன் தாக்கம் முற்றுமுழுதாக தொழிலாளரையே பாதித்திருக்கிறது.

ஊழியர் சேமலாப நிதியை சூறை யாடுவது இதன் ஒரு உதாரணமாக கூறலாம். இப்படியாக தொடர்ச்சியாக மிதிக்கப்படுகிற தொழிலாள வர்க்கம் மீட்சி பெற வேண்டும். அதற்காகவே நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும்.

இந்த தேர்தல் ஆண்டிலே தமது முழுப் பலத்தையும் ஒருங்கிணைத்து ஒடுக்கப்படுகிற மக்களாகிய நாம் கட்டுக்களை உடைத்தெறிந்து – விடுதலை பெறுவோம் என்று உறுதி பூண்வோம்.– என்றுள்ளது.

# தொழிலாளருக்கான உரிமைகள் உரியவகையில் கிடைப்பதில்லை!

## சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆசீர்வாதம் ஜோன்சன் தெரிவிப்பு

ம தினங்கள் கடந்து செல்லுகின்ற பொழுதிலும் தொழிலாளர்களுக்கான உரிமைகள் உரியவகையில் கிடைக் கப்பெறவில்லை.

வடமாகாண சுத்திகரிப்பு தொழிலா ளர்கள் சங்கத்தின் முன்னாள் தலை வர் ஆசீர்வாதம் ஜோன்சன் தெரிவித் தார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மே தினங்களுக்கும் நாங்கள் சவால்களை விடுகிறோம் . ஆனால் எங்களுடைய உரிமைக் குரல் கள் இரத்து செய்யப்படுகிறது. தொடர்ந்து சுத்திகரிப்பு தொழிலாளர்கள் உலகம் முழுவதும் எதிர்நோக்கும் பிரச்சினை களில் ஒன்றாக காணப்படுகிறது.

சுத்திகரிப்புத் தொழிலாளியாக எந்த மே தின கூட்டத்திலும் சொல்லுவார்கள். அது அத்திவார தொழில். ஆனால் உரிமைகள் எவ்வளவு தூரம் பேணப் படுகின்றன.

கடந்த வாரம் பத்திரிகையில் பார்க்கும் போது ஆயிரம் ரூபாவுக்கு மலையக தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தை மேற்கொண்டு இருந் தார்கள். எங்கட உரிமையை நோக்கி நாங்கள் தொழிற்சங்கமாக பயணிக் கின்ற பொழுது எமக்கான வாய்ப்புகள் தட்டிக் கழிக்கப்படுகின்றன.

எங்களுடைய உரிமை மறுக்கப் படுகிறது. தொழிலாளர் தினததைத் தாண்டி எமது உரிமை உறுதிபடுத்த படவேண்டும் . அனைத்து அரசியல் வாதிகளும் பணிவுடன் இதனை செயற்படுத்தி பார்க்க வேண்டும்.



சுத்திகரிப்பு தொழிலாளர்கள் வேலையை தொடர்ந்து மேற்கொள் ளும் பொழுது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கையுறை முதல் அனைத்து அணிகலன்களும் வழங்கப்பட வேண் டும். தொழிலாளர்களுடைய பிரச்சினை களை நாங்கள் முன்வைக்கின்ற பொழுது நாங்கள் அரசாங்கத்தின் எதிர் அலைகள் விரோதிகள் என்று கூறு கின்றார்கள்.

கையுறை முதல் பாதணிகள்வரை ஒழுங்காக ஒரு தொழிலாளிக்கு வழங் கப்பட வேண்டும்.

எங்களுடைய உரிமைகளை எழுத்து மூலமாக அல்லது மகஜராக கொடுத்தால் என்ன பின்னாளில் அது நிராகரிக்கப்படுகிறது.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற ஒவ்வொருவருடைய செயல்களையும் நீங்கள் பார்க்கின்ற பொழுது அவர்கள் தொழிற்சங்கத்தில் இருந்து உருவாக்கப்பட்டவர்கள்.

ஆனால் அவர்கள் கடந்த நாள் களில் தாங்கள் தலைவர்களாக வரு கின்ற பொழுது அவர்கள் தொழிலா ளர்களினுடைய உரிமைகளைப் பெற் றுத்தர முன்வர வேண்டும். ஆனால் அவ்வாறு நடப்பதில்லை .

அரச ஊழியர்கள், தனியார் ஊழி யர்கள் என இரண்டு ஊழியர்கள் காணப்படுகின்றோம். அரச ஊழி யர்களுக்கு, தனியார் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விடயங்கள் வழங்கப்பட வேண்டும். இன்றும் எமக் கான சம்பள பிரச்சினைகள் காணப் படுகின்றன.

நாங்கள் இன்னும் பொருளாதார நெருக்கடியையே எதிர் கொண்டு வரு கின்றோம். சம்பளங்கள் உயர்தப் படாது இருக்கின்றது. அரசியல்வாதி களுக்கு இந்த மே தின காலத்தில் இந்த சம்பள உயர்வை அடையாளப் படுத்துகின்றோம். அடிமை, அடிமைத் தனம், கொத்தடிமை இந்த மூன்று அடிமைத்தனங்களிலிருந்தும் தொழி லாளர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

இன்று எத்தனை பேர் படித்து பட்ட தாரிகளாக வந்தும் படித்து வேலைகள் இன்றி கவலைப்பட்டுக் கொண்டிருந் தார்கள் .இன்று நாங்கள் சொல்லு கின்ற விடயம் மே தினம் என்பது தொழிலாளர்களுடைய தினம் அது வேறெவருக்கும் உரத்தானது அல்ல. தொழிலாளர்கள் தொடர்பில் நாடாளு மன்றத்தில் கரிசனை குறைவாகவே உள்ளது.

போராட்டம் ,போராட்டம், போராட்டம், என்று பலவிதமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய பொழுதும் அரசு உரிமைகளை இதுவரை தந்த தில்லை. எத்தனையோ தொழிலாளிகள் வயதுகள் சென்றும் தமக்கான நிய மனம் இன்றி இன்னும் பணிபுரிகின் றார்கள்.– என்றார்.

# சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் திசை திருப்ப முயலும் சிங்கள பேரினவாதம்!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தினச் செய்தியில் அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவிப்பு

மூக ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் மக்கள் மத்தியிலிருந்து மறைக்கவும் திசை திருப்பவும் சிங்கள பௌத்த பேரினவாதம் தூண்டி விடப் படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் அதிக ரித்து வந்த அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, சீனி, கோதுமை மா, மல்லி, மிளகாய், தேங் காய், பால்மா, மற்றும் மரக்கறிகள், மீன், இறைச்சி வகைகளின் விலை கள் உச்சத்தைத் தொட்டன. எரிபொருள் களின் விலைக் குறைப்பு என்பதுவெறும் கண்துடைப்பு மட்டுமே.


இவ்வாறு புதிய ஜனநாயக மாக் சிச லெனினிசக் கட்சியின் மே தினச் செய்தியில் அதன் பொதுச் செயலா ளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மின்சாரக் கட்டணம் மீண்டும் மீண்டும் உயர்த்தப்பட்டு இதுவரை பத்து லட்சம் பாவனையாளர்கள் மின் இணைப்பை இழந்துள்ளனர். அதே போன்று போக்குவரத்து உள்ளிட்ட சேவைத்துறைக் கட்டணங்கள் மிக மோசமாக அதிகரிக்கப்பட்டன. வற் வரி உள்ளிட்ட நேரடி, மறை முகவரிகள் மக்கள் மீது திணிக்கப்பட்டன.

இவற்றால் நாட்டின் ஏகப் பெரும் பான்மையான உழைக்கும் மக்கள் மலைபோன்று வளர்ந்துள்ள பொருளா தார நெருக்கடிகளால் அன்றாட உண வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது ஒருநேர உணவுடனும் பட் டினியுடனும் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

அரச ஊழியர்கள் அர்ப்ப சம்பள உயர்வுடன் ஏமாற்றப்பட்டுள்ளனர். தனியார் துறையினர் முற்றாகவே கைவிடப்பட்டுள்ளனர். மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளம் ரூபா இரண்டாயிரம் வழங்க வேண்டும் எனும் கோரிக்கை முதலாளியக் கொம்பனிகளால் மறுக்



கப்படுகிறது. சம்பள உயர்வே இல்லை எனத் திமிர்த்தனம் காட்டுகிறார்கள்.

கல்வித்துறை சீரழிக்கப்பட்டு தனி யார் மயமாக்கப்படுகிறது. பாடசாலை களில் மாணவர்களின் கல்விச் செலவு அதிகரித்து, பெற்றோரால் தாங்கிக் கொள்ள இயலாது தடுமாறுகின்றனர். சுகாதாரத் துறை சிதைக்கப்பட்டு அரச மருத்துவமனைகளில் நோயாளர்கள் பெருகுவதுடன் மருந்துகள் பெற முடி யாத அவல நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளனர். நாட்டின் சனத் தொகை யில் அரைவா சிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள். அவ்வாறு இருந்தும் அவர் கள் கடும் உழைப்புச் சுரண் டலுக்கு உள்ளாக்கப் பட்டு வருகிறார்கள். அத்து டன் பால் நிலைத் தாழ்வுகளுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளா க்கப்படுகின்றனர்.

இந்தச் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் மக்கள் மத்தியிலிருந்து மறைக்கவும் திசை திருப்பவும் சிங்கள பௌத்த பேரினவாதம் தூண்டி விடப்படு கிறது. வடக்குக், கிழக்கு, மலையகத் தில் திட்டமிடப்பட்ட நில நீர் ஆக்கிர மிப்புகளும் இன மதக் குரோதங்களும் முன்தள்ளப்படுகின்றன. இவை அனைத்துக்கும் பின்னால் நவகொல னிய அடிவருடிகளான ஆளும் மேட்டுக் குடி உயர் வர்க்க ஆட்சியி னரே இருந்து வருகின் றனர். இவர்களையே இன் றைய ரணில் – ராஜபக்ச ஆட்சியினர் பிரதிநிதித்துவம் செய்து நிற்கின்றனர். இத்தகையோர்தான் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின தும் ஏனைய சிறுபான் மையினரதும் இனத் துவ உரிமைகளை மறுத்து அதி காரப் பரவலாக் கத்தையும், சுயாட்சிக் கோரிக்கைகளையும் நிராகரித்து வரு கிறார்கள்.

இத்தகைய ரணில் – ராஜபக்ஷ ஆளும் வர்க்கத் தரப்பினர் இன்று அமெரிக்க – இந்தியப் பெரும் 'முதலா ளியக் கோப்ப ரேட்' நிறுவனங்களுக்கும் ஏனைய நாடுகளின் அந்நிய முதலீடு களுக்கும் நாட்டின் வளங்களைத் தாரைவார்த்து வருகிகிறார்கள்.

மேலும் உலகில் போர்கள் தொடர்வ தையே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் ஊக்குவித்து வருகின்றன. அதன் வெளிப்பாடாகவே உக்கிரேன் போர் தோற்றுவிக்கப்பட்டு தொடரப்படுகிறது. இப்போது பலஸ்தீன காஸா மீதான இனப் படுகொலை யுத் தம் அமெரிக்க–இஸ்ரேலிய ஆக்கிர மிப்பாளர்களினால் கொடூரமாகத் தொடரப்படுகிறது.

இன்றைய உலகச் சூழலில் அமெ ரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையி லான ஏகாதிபத்திய சக்திகளே உலக மக்களின் பொது எதிரியாகக் காணப் படுவது இன்றைய சர்வதேச ஒழுங் கில் காணப்படும் யதார்த்தமாகும். –என் றுள்ளது.

இத்தகைய தேசிய– சர்வதேசச் சூழலின் மத்தியிலேயே சர்வ தேசத் தொழிலாளர் களின் போராட்டத் தின மான மேதினம் இவ் ஆண்டு இடம் பெறுகிறது.

எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி நாளை மே தினத் தைப் புரட்சிகரப் பேரணிகள் –பொதுக் கூட்டங்களாக யாழ்ப்பாணம், மலைய கம் – மாத்தளை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கிறது.

ஐக்கிய இராச்சியத்தின் தலைநகரில் இடம்பெறும் உழைக்கும் மக்கள் பேரணியில் எமது கட்சி பங்கு கொள் கிறது. ஆதலால் இவற்றில் அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் பங்கேற்க வேண்டும் .– என்றுள்ளது.

# உழைக்கும் வர்க்கத்தை நினைவு கூர்வதில் மேதின நாளில் பெருமிதம் அடைகின்றேன்!

## நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன்

இன்றைய தினம் சர்வதேச தொழிலா ளர் தினத்தைக் கொண்டாடும் எமது உறவுகளுக்கு தொழிலாளர் தின வாழ்த் துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருத பாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரும்பாடு பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, இந்த நாட்டின் வளர்ச்சிக் காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும்



தொழிலாளர்களின் மேன்மையை உலகறிய செய்த இந்த மக்களின் மகத்தான இந்நாளில் எமது உழைக்கும் வர்க்கத்தினரை நினைவு கூர்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகளை பாதுகாக்கவும், தொழிலாளர் விரோத போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்த தொழி லாளர் தினத்தில் உறுதி கொள்கி றேன்.

பெரும் இழுபறியாக உள்ள பெருந் தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பை உரிய முறையில் பெற்றுக் கொடுக்க இலங்கை தொழிலாளர் காங் கிரஸ் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது .

அந்த வகையில் இதற்கான உரிய தீர்வைக் கூடிய விரைவில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நாம் பெற்றுக் கொடுப் போம் .– என்றுள்ளது.

# உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளை இலக்கு வைப்பதாக மே தினம் அமையட்டும்!

## மலையகப் பாட்டாளிகள் அரங்கத்தின் மே தினச் செய்தியில் தெரிவிப்பு

தொழிலாளர் உரிமைசார் பிரச்சினைகள் அதிகரித்து அவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவற்றை சரிசெய்து அவர்களது பிரச்சினைகளைப் பிரதிபலிக்கும் பிரகடனங்களைச் செய்து அவற்றை தீர்ப்பதை இலக்காகக் கொண்டு பயணிப்பதே தொழிலாளர் தினத்தில் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா தலைமையிலான மலையக பாட்டாளிகள் அரங்கம் மே தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சமகால தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் கண்டு அதற்கான தீர்வு யோசனைகளையும் முன்மொழிந்து மலையகப் பாட்டாளிகள் அரங்கம் 2024 மேதினப் பிரகடனத்தை வெளியிடுகின்றது.

இத்தகைய தொழிலாளர் நலன்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதமாக அனைத்துத் தொழிலாளர் தரப்புகளையும் பயணிக்குமாறும் அரங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

அத்துடன் அரசியல் நோக்கத்துக்க-ாகவும் களியாட்ட நிகழ்வாகவும் மது பாவனையை ஊக்குவிக்கும் வகையிலும் தொழிலாளர் தினம் மாற்றப்பட்டு வருவதைப் பாட்டாளிகள் அரங்கம் கண்டிக்கிறது.

மரபு சார் மலையகத் தொழில் சங்கங்களை விமர்சனம் செய்வதோடு தங்களை மட்டுப்படுத்திக் கொள்ளாது தொழிலாளர் உரிமைசார் விடயங்களைக் கவனத்தில் எடுத்துத் தமக்கு இயலுமான வழிகளில் இளைய சமுதாயத்தினர் இயங்கத் தொடங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

மலையக பாட்டாளிகள் அரங்கம் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை மலையகத் தமிழ் இனம் உழைக்கும் வர்க்கத்தை வேர்ச் சமூகமாகக் கொண்டு விரிந்தது. இருநூறு ஆண்டுகளைக் கடந்து, இலங்கையின் தேசிய இனமாக முன்னிறுத்தும் முனைப்பில் இருக்கும் மலையகத் தமிழ் இனத்தின் மூன்றில் இரண்டு பங்கினர் பெருந்தோட்டக் கைத்தொழில் சார்ந்த தொழிலாளர் வர்க்கத்தினராக, அவர்கள் வழிவந்த வர்களாகவே இருக்கின்றனர்.

இன்று மாற்றமடைந்துவரும் பெருந்தோட்டக் கட்டமைப்பில் தோட்டத் தொழில் வாய்ப்புகளை வேகமாக இழந்துவரும் இந்த உழைக்கும் வர்க்கம், குறிப்பிட்ட துறைசாராத வகையிலும் முறைசாராத வகையிலும் தமது உழைப்பை வழங்கி வருமானம் ஈட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இருநூறு வருட பாரம்பரியமாக பார்க்கப்பட்டுவந்த 'தோட்டத் தொழிலாளர்' என்ற நிலைக்கு அப்பால் சென்று மலையகப் பாட்டாளி வர்க்கத்தை நோக்குவதும் அவர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான, உழைப்புச் சுரண்டலைத் தடுப்பதான ஆக்கபூர்வமான திட்டங்களை முன்நகர்த்துவதும் சக உழைப்பாளர் வர்க்கத்துடன் கைகோர்த்து உழைப்பாளர் வர்க்கத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுப்பதும் மலையகப் பாட்டாளிகள் அரங்கத்தின் குறிக்கோளாகும்.

இந்தப் பின்புலத்தில் 2024 மே தினப் பிரகடனங்களாக பின்வருவன வற்றை மலையகப் பாட்டாளிகள் அரங்கம் முன்வைக்கிறது.

1. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற சன்மானம் 'நாட்கூலி' முறைமையில் இருந்து மாற்றப்படுதல் வேண்டும்.

2. கூலித்தொகையில் தங்கியிருக்கும் உழைப்புக்கான வருமானக் கோரிக்கை பரப்பளவு நிறை விலை என்பதாக மாற்றம் பெற வேண்டும் .

3. காணிக் கொழுந்து அல்லது அவுட்குரோவர் முறை என உழைப்புச் சுரண்டல் இடம் பெறுவது முற்றாக நீக்கப்படல் வேண்டும்.

4. நிலைமாற்றமடைந்துவரும் பெருந்தோட்ட முறைமை மாற்றத்தில் தென்பகுதிகளைப்போல உயர் நிலத் தேயிலைத் தோட்டங்களும் 'சிறு தோட்ட முறைமைக்குள்' கொண்டுவரப்படுதல் வேண்டும்.

5. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் சிறுதோட்ட உடமையாளர்களாக காணி உரித்துடன் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

6. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அவர்கள் வழிவந்த பெருந்தோட்டச் சமூகத்தினருக்கு 'வீட்டுக் காணி உரிமையை' அரசு உறுதி செய்ய வேண்டும்.

7. பல்வகை உயிர் பாதுகாப்பு எண்ணக் கருவின் பேரில் காடாக்கல் நடைமுறைப் படுத்தப் படும் போது தோட்டத் தொழிலாளர்களும் அவர்கள் சார்ந்த மக்களுமே கூட அந்த எண்ணக் கருவில் முதன்மையிடத்தில் வைத்து நோக்கப்படுதல் வேண்டும்.

8. தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழில் அல்லாத விவசாயத்தை முழு நேர, பகுதி நேரத் தொழிலாகக் கொண்டுள்ள விவசாயிகளதும் காணி உரித்து உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

9. தோட்டப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு, சிறு பண்ணை முயற்சிகளில் ஈடுபடுவோரது தொழில் உரிமையைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

10. தோட்டங்களுக்கு வெளியே கடைச்சிப்பந்திகளாக, சிறப்பங்காடி ஊழியர்களாக, சிறு தொழில் நிறுவனங்களில் பணிகளில் ஈடுபட்டு வரும் மலையக ,ளைஞர் யுவதிகள் தொடர்பில் தனியான கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளளும் பொறுப்பை மலையக அதிகார சபை முன்னெடுக்க வேண்டும்.

11. வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்லும் மலையகப் பெண்கள் தொடர்பான பதிவேடு ஒன்றினைப் பராமரிக்கும் பொதுத் தரவுத் தளம் ஒன்றை உருவாக்கிச் செயற்படுவதற்கு மலையக அதகார சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கங்களுக்கு செலுத்தும் சந்தாவை தோட்ட நிர்வாகம் 'பிடித்துக் கொடுக்கும்' முறைமை முற்றாக ஒழிக்கப்படுதல் வேண்டும்.

13. தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க சந்தாவைக் கொண்டே 100 ஆண்டு கால அரசியல் நகரத் தப்பட்டு வந்துள்ள நிலையில் தோட்டத் தொழிலாளர்களிடம் மாதாந்த சந்தா பெறும் முறைமை முற்றாக நிறுத் தப்படல் வேண்டும். - என்றுள்ளது.

# பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான கூட்டம்

மே தின ஒன்று கூடலும் பல்கலைக்கழக சேவையில் ஓய்வுபெற்ற ஊழியருக்கான சங்க மீள் அங்குரார்ப்பணமும் இன்று புதன்கிழமை, காலை 10 மணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் தொழிலாளர் தினமாகிய இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற மேதின நிகழ்வில் கலந்து கொள்ளவும், அதனைத் தொடர்ந்து மீள ஆரம்பிக்கப்படவுள்ள பல்கலைக்கழக சேவையில் ஓய்வுபெற்ற ஊழியருக்கான சங்க கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வேண்டுகின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைச் செயலாளர் த.சிவரூபன் தெரிவித்துள்ளார்.



# கொழும்பில் இடம்பெறும் 14 மே தின நிகழ்வுகள்!

சர்வதேச தொழிலாளர் தினம் அல்லது மே தினம் இன்று கொண்டாடப்படுகின்றது.

இந்த நிலையில், அதற்கு நிகராக அரசியல் கட்சிகள் தங்களது பலத்தினை மக்களுக்கு காண்பிக்கும் நோக்கில் பேரணிகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

கொழும்பு நகரில் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் 14 மே தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் 40 மே தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு மே தின நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு ஜனாதிபதியின் தலைமையில் மாளிகாவத்தை பி.டி.சிறிசேன விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் இதற்கான மேடை அமைக்கப்பட்டுள்ளது.

“மீண்டும் வீழ்ச்சியடையாத மகத்தான நாடு எப்போதும்“ எனும் தொனிப்பொருளில் இம்முறை ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று காலை ஏற்பாடு செய்துள்ள மே தினப் பேரணி மற்றும் கூட்டத்திலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் கொழும்பு கெம்பல் பாரக்கில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு கோட்டை சத்தம் வீதியில் மே தின கூட்டத்தை நடத்தவுள்ளது.

அதற்காக சத்தம் வீதிக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு குணசிங்கபுர மைதானத்திலிருந்து பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு கொழும்பு நகரின் பல இடங்களை கோரிய போதிலும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லையென ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

“நாட்டை உருவாக்கும் தீர்வுக்கு, ஒன்றான மக்கள் பலம்“ எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தி நான்கு இடங்களில் மே தினக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு பி.ஆர்.சி. மைதானத்தில் தேசிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணி ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன், விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் கன்னங்கர மாவத்தையில் மே தினக் கூட்டம் நாளை மாலை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் மற்றுமொரு கூட்டம் நடைபெறவுள்ளது. மாத்தறையிலும் தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

அனுராதபுரம் பொது மைதானத்திலும் தேசிய மக்கள் சக்தியின் மற்றுமொரு மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளது.

# வவுனியாவில் உழைப்பாளர்களுக்கு இன்று விடுமுறையை வழங்குங்கள்!

## வர்த்தக சங்கம் கோரிக்கை

(கே.வசந்தன்)

வவுனியாவில் உழைப்பாளர்களுக்கு இன்றைய தினம் விடுமுறை வழங்குமாறு வவுனியா வர்த்தக சங்கம் கோரியுள்ளது.

தொழிலாளர் தினம் அல்லது உழைப்பாளர் தினம் என்பது உலகம் முழுவதும் ஆண்டு தோறும் கொண்டாடப்படும் விடுமுறை நாளாகும். அது தொழிலாளர் ஒன்றிய இயக்கத்திலிருந்து தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் சமூக சாதனைகளைக் கொண்டாடுவதை குறிக்கின்றது.

அதிகபட்சமான நாடுகள் தொழிலாளர் தினத்தை மே 1 அன்று கொண்டாடுகின்றன. இந்நாள் பிரபலமாக மே தினம் அல்லது சர்வதேச தொழிலாளர்தினம் என்று அறியப்படுகின்றது.

இந்த தினத்தில் வவுனியா மாவட்டத்திலிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய சேவைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு வவுனியா வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.